# tirumantiram of tirumUlar - part IIIb
# (in Tamil Script, Unicode/UTF-8 format)

## திருமந்திரம் - (திருமூலர்)
## எட்டாம் தந்திரம் (2122-2648)

---

This webpage with Tamil Text is based on Unicode encoding.
To view the Tamil text correctly you need to set up the following:

i). You need to have Unicode fonts containing Tamil Block (Latha, Arial Unicode MS, TSCu_Inaimathi, Code2000, UniMylai,...) installed on your computer
and the OS capable of rendering Tamil Scripts (Windows 2000 or Windows XP).

ii)Use a browser that is capable of handling UTF-8 based pages

(Netscape 6, Internet Explorer 5) with the Unicode Tamil font chosen as the default font for the UTF-8 char-set/encoding view.

In case of difficulties send an email request to kalyan@geocities.com or kumar@vt.edu

C - Project Madurai 2002
Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of tamil literary works and to distribute them free on the Internet.
Details of Project Madurai are available at the website

**http://www.projectmadurai.org/**

You are welcome to freely distribute this file, provided this header page is kept intact.

---

திருமந்திரம்

# எட்டாம் தந்திரம் (சுப்பிராமேம்) (2122-2648)

## 1. உடலிற் பஞ்சபேதம்

### 2122

காயப்பை ஒன்று சரக்குப் பலவுள
மாயப்பை ஒன்றுண்டு மற்றுமோர்
பையுண்டு
காயப்பைக்கு உள்நின்ற கள்வன்
புறப்பட்டால்
மாயப்பை மண்ணா மயங்கிய
வாறே. 1

### 2123

அத்தன் அமைத்த உடல்இரு

கூறினில்
சுத்தம தாகிய சூக்குமம்
சொல்லுங்கால்
சத்த பரிச ரூப ரசகந்தம்
புத்திமான் ஆங்காரம் புரியட்ட
காயமே. 2

2124
எட்டினில் ஐந்தாகும் இந்திரி
யங்களும்
கட்டிய மூன்று கரணமும் ஆயிடும்
ஒட்டிய பாசம் உணர்வுஅது வாகவே
கட்டி அவிழ்ந்திடும் கண்ணுதல்
காணுமே. 3

2125
இரதம் உதிரம் இறைச்சிதோல்
மேதை

மருவிய அத்தி வழும்பொடு மச்சை
பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி
உருவ மலால்உடல் ஒன்றென லாமே.
4

2126
ஆரே அறிவார் அடியின்
பெருமையை
யாரே அறிவார் அங்கவர் நின்றது
யாரே அறிவார் அறுபத்தெட்டு
ஆக்கையை
யாரே அறிவார் அடிக்காவல்
ஆனதே. 5

2127
எண்சாண் அளவால் எடுத்த
உடம்புக்குள்
கண்கால் உடலில் சுரக்கின்ற

கைகளில்
புண்கால் அறுபத்தெட்டு ஆக்கை
புணர்கின்ற
நண்பால் உடம்பு தன் னால் உடம்
பாமே. 6

2128
உடம்புக்கும் நாலுக்கும் உயிராகிய
சீவன்
ஒடுங்கும் பரனோடு ஒழியாகப்
பிரமம்
கடந்தொறும் நின்ற கணக்கது காட்டி
அடங்கியே அற்றது ஆரறி வாறே. 7

2129
ஆறுஅந்த மாகி நடுவுடன் கூடினால்
தேறிய மூவாறும் சிக்கென்று
இருந்திடும்

கூறுங் கலைகள் பதினெட்டும்
கூடியே
ஊறும் உடம்பை உயிருடம்பு
எண்ணுமே. 8

2130
மெய்யினில் தூல மிகுந்த
முகத்தையும்
பொய்யினில் சூக்கம் பொருந்தும்
உடலையும்
கையினில் துல்லியம் காட்டும்
உடலையும்
ஐயன் அடிக்குள் அடங்கும் உடம்பே.
9

2131
காயும் கடும்பரி கால்வைத்து
வாங்கல் போல்

சேய இடம்அண்மை செல்லவும் வல்லது
காயத் துகிர் போர்வை ஒன்றுவிட்டு
ஆங்குஒன்றிட்டு
ஏயும் அவரென்ன ஏய்ந்திடும்
காயமே. 10

2132
நாகம் உடல்உரி போலும்நல்
அண்டச
மாக நனாவில் கானாமறந் தல்லது
போகலும் ஆகும் அரன்அரு ளாலே
சென்று
ஏகும் இடம்சென்று இருபயன்
உண்ணுமே. 11

2133
உண்டு நரக சுவர்கத்தில் உள்ளன

கண்டு விடும்சூக்கம் காரண
மாச்செலப்
பண்டு தொடரப் பரகாய
யோகிபோல்
பிண்டம் எடுக்கும் பிறப்பு இறப்பு
எய்தியே. 12

2134
தான்அவ னாகிய தற்பரம்
தாங்கினோன்
ஆனவை மாற்றிப் பரமத்து
அடைந்திடும்
ஏனை உயிர்வினைக்கு எய்தும்
இடம்சென்றும்
வானும் நிலனும் புகுந்தும்
வருந்துமே. 13

2135

ஞானிக்குக் காயம் சிவமாகும்
நாட்டில்
ஞானிக்குக் காயம் உடம்பே
அதுவாகும்
மேனிக்கும் யோகிக்கும் விந்துவும்
நாதமும்
மோனிக்குக் காயம்முப் பாழ்கெட்ட
முத்தியே. 14

2136
விஞ்ஞானத் தோர்க்குஆ ணவமே
மிகுதனு
எஞ்ஞானத் தோர்க்குத் தனுமாயை
தான்என்ப
அஞ்ஞானத் தோர்க்குக் கன்மம்
தனுவாகும்
மெஞ்ஞானத் தோர்க்குச் சிவதனு
மேவுமே. 15

2137

மலமென்று உடம்பை மதியாத ஊமர்
தலமென்று வேறு தரித்தமை கண்டீர்
நலமென்று இதனையே நாடி
இருக்கில்
பலமுள்ள காயத்தில் பற்றும்இவ்
அண்டத்தே. 16

2138

நல்ல வசனத்து வாக்கு மனாதிகள்
மெல்ல விளையாடும் விமலன்
அகத்திலே
அல்ல செவிசத்த மாதி மனத்தையும்
மெல்ல தரித்தார் முகத்தார் பசித்தே.
17

2, உடல்விடல்

2139

பண்ணாக்கும் காமம் பயிலும்
வசனமும்
விண்ணாம் பிராணன் விளங்கிய
சத்தமும்
புண்ணாம் உடலில் பொருந்தும்
மனத்தையும்
அண்ணாந்து பார்க்க அழியும்
உடம்பே. 1

2140

அழிகின்ற ஓர் உடம்பு ஆகும்
செவிகள்
கழிகின்ற காலவ் விரதங்கள் தானம்
மொழிகின்ற வாக்கு முடிகின்ற நாடி
ஒழிகின்ற ஊனுக்கு உறுதுணை
இல்லையே. 2

2141
இலையாம் இடையில் எழுகின்ற
காமம்
முலைவாய நெஞ்சத்து மூழ்கும்
உளத்துத்
தலையாய மின்னுடல் தாங்கித்
திரியும்
சிலையாய சித்தம் சிவமுன்
இடைக்கே. 3

3. அவத்தை பேதம் - கீழால்
அவத்தை
2142
ஐஐந்து மத்திமை யானது சாக்கிரம்
கைகண்ட பன்னான்கில் கண்டம்
கனாஎன்பர்
பொய்கண் டிலாத புருடன்இத யம்
சுழுனை

மெய்கண் டவன் உந்தி ஆகும்
துரியமே. 1

2143
முப்பதோடு ஆறின் முதல்நனா
ஐந்தாகச்
செப்புஅதில் நான்காய்த்
திகழ்ந்திரண்டு ஒன்றாகி
அப்பதி யாகும் நியதி முதலாகச்
செப்பும் சிவம்ஈறாய்த் தேர்ந்துகொள்
ளீரே. 2

2144
இந்தியம் ஈரைந்து ஈரைந்து
மாத்திரை
மந்திர மாய்நின்ற மாருதம் ஈரைந்தும்
அந்தக்
கரணம் ஒருநான்கும் ஆன்மாவும்

பந்தஅச் சாக்கரப் பாலது ஆகுமே. 3

2145

பாரது பொன்மை பசுமை உடையது
நீரது வெண்மை செம்மை நெருப்பது
காரது மாருதம் கறுப்பை உடையது
வானகம் தூமம் மறைந்துநின் றாரே. 4

2146

பூதங்கள் ஐந்தும் பொறியவை ஐந்துளும்
ஏதம் படஞ்செய்து இருந்து புறநிலை
ஓதும் மலம்குணம் ஆகும்ஆ தாரமொடு
ஆதி அவத்தைக் கருவிதொண் ணூற்றாறே. 5

2147
இடவகை சொல்லில் இருபத்தஞ்சு ஆனை
படுபர சேனையும் பாய்பரி ஐந்தும்
உடையவன் மத்திமை உள்ளுறும் நால்வர்
அடைய நெடுங்கடை ஐந்தொடு நான்கே. 6

2148
உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி
உடம்பிடை நின்ற உயிரை அறியார்
உடம்பொடு உயிரிடை நட்புஅறி யாதார்
மடம்புகு நாய்போல் மயங்குகின் றாரே. 7

2149
இருக்கின்ற வாறுஒன்று அறிகிலர்
ஏழைகள்
மருக்கும் அசபையை மாற்றி முகந்து
கருக்கொண்டு காமாரி சார
முகந்தேர்ந்து
உருக்கொண்டு தொக்க உடல்ஒழி
யாதே. 8

2150
ஒளித்திட்ட டிருக்கும் ஒருபதி னாலை
அளித்தவன் என்னுள்ளே ஆரியன்
வந்து
அளிக்கும் கலைகளி னால்அறு பத்து
ஒளித்திட்டு வைத்தான் ஒடுங்கிய
சித்தே. 9

2151

மண்ணினில் ஒன்று மலர்நீரும்
மருங்காகும்
பொன்னினில் அங்கி புகழ்வளி
ஆகாயம்
மன்னும் மனோபுத்தி ஆங்காரம்
ஓர்ஒன்றாய்
உன்னின் முடிந்தது ஒருபூத சயமே.
10

2152
முன்னிக்கு ஒருமகன் மூர்த்திக்கு
இருவர்
வன்னிக்கு மூவர் வதுவைக்கு
நால்வர்
கன்னிக்கு பிள்ளைகள் ஐவர்
முனாள்இல்லை
கன்னியைக் கன்னியே காதலித்
தானே. 11

2153
கண்டன ஐந்தும் கலந்தனதான்
ஐந்தும்சென்று
உண்டன நான்கும் ஒருங்கே
உணர்ந்தபின்
பண்டைய தாகிப் பரந்து
வியாக்கிரத்து
அண்டமும் தானாய்
அமர்ந்துநின்றானே. 12

2154
நின்றவன் நிற்கப் பதினாலில்
பத்துநீத்து
ஒன்றிய அந்தக் கரணங்கள்
நான்குடன்
மன்று கலந்த மனைவாழ்க்கை
வாதனை

கன்றிய கண்டத்தில் கண்டான்
கனவதே. 13

2155
தானம் இழந்து தனிபுக்கு இதயத்து
மானம் அழிந்து மதிகெட்டு மாலாகி
ஆன விரிவுஅறி யாஅவ்
வியத்தத்தில்
மேனி அழிந்து கழுத்தியது ஆமே.
14

2156
கழுமுனையைச் சேர்ந்துள மூன்றுடன்
காட்சி
கெழுமிய சித்தம் பிராணன்தன்
காட்சி
ஒழுகக் கமலத்தின் உள்ளே யிருந்து
விழுமப் பொருளுடன் மேவிநின்

றானே. 15

2157
தானத்து எழுந்து தருக்கு துரியத்தின்
வானத்து எழுந்துபோய் வையம்
பிறகிட்டுக்
கானத்து எழுந்த கருத்தின்
தலையிலே
ஊனத்து அவித்தைவிட்டு ஊமன்நின்
றானே. 16

2158
Yஊமை எழுத்தொடு பேசும்
எழுத்துறில்
ஆமை அகத்தினில் அஞ்சம்
அடங்கிடும்
ஓமயம் உற்றுஅது உள்ளொளி
பெற்றது

நாமயம் அற்றது நாம்அறி யோமே.
17

2159
துரியம் இருப்பதும் சாக்கிரத்து
உள்ளே
நரிகள் பதினாலு நஞ்சுண்டு செத்தன
பரிய புரவியும் பாறிப் பறந்தது
துரியம் இறந்திடம் சொல்லஒண்
ணாதே. 18

2160
மாறா மலம்ஐந்தால் மன்னும்
அவத்தையில்
வேறாய மாயா தநுகர
ணாதிக்குஇங்கு
ஈறாகா தேஎவ்வுயிரும்
பிறந்துஇறந்து

ஆறாத வல்வினை யால்அடி
யுண்ணுமே. 19

2161
உண்ணும்தன் ஊடாடது ஊட்டிடு
மாயையும்
அண்ணல் அருள்பெற்ற முத்தியது
ஆவது
நண்ணல் இலாஉயிர் ஞானத்தி
னால்பிறந்து
எண்ணுறு ஞானத்தின் நேர்முத்தி
எய்துமே. 20

2162
அதிமூட நித்திரை ஆணவம் நந்த
அதனால் உணர்வோன்
அருங்கன்மம் முன்னி
நிதமான கேவலம் இத்திறம் சென்று

பரமாகா ஐஅவத் தைப்படு வானே. 21

2163
ஆசான்முன் னேதுயில் மாண
வகரைத்
தேசாய தண்டால் எழுப்பும்
செயல்போல்
நேசாய ஈசனும் நீடுஆண வத்தரை
ஏசாத மாயாள்தன் னாலே
எழுப்புமே. 22

2164
மஞ்சொடு மந்தா கினிகுட மாம்என
விஞ்சுஅறி வில்லோன் விளம்பும்
மிகுமதி
எஞ்சலில் ஒன்றெனு மாறுஎன
இவ்வுடல்

அஞ்சணும் மன்னன்அன் றேபோம்
அளவே. 23

2165
படியுடை மன்னவன் பாய்பரி ஏறி
வடிவுடை மாநகர் தான்வரும் போது
அடியுடை ஐவரும் அங்குஉறை
வோரும்
துடியில்லம் பற்றித் துயின்றனர்
தாமே. 24

2166
நேரா மலத்தை நீடுஐந்து
அவத்தையின்
நேரான வாறுஉன்னி நீடு நனவினில்
நேரா மலம்ஐந்தும் நேரே தரிசித்து
நேராம் பரத்துடன் நிற்பது நித்தமே.
25

## 4. மத்திய சாக்கிர அவத்தை

### 2167

சாக்கிர சாக்கிரம் தன்னில் திரோதாயி
சாக்கிர சொப்பனம் தன்னிடை
மாமாயை
சாக்கிரம் தன்னில் அழுத்திதற்
காமியம்
சாக்கிரம் தன்னில் துரியத்து
மாயையே. 1

### 2168

மாயை எழுப்பும் கலாதியை
மற்றதின்
நேய இராகாதி ஏய்ந்த துரியத்துத்
தோயும் கழுமுனை கனாநனா
வும்துன்னி

ஆயினன் அந்தச் சகலத்துஉ ளானே.
2

2169
மேவிய அந்த கண் விழிகண்
குருடனாம்
ஆவயின் முன்அடிக் காணு
மதுகண்டு
மேவும் தடிகொண்டு சொல்லும்
விழிபெற
மூவயின் ஆன்மா முயலும் கருமமே.
3

2170
மத்திமம் ஒத்த சிலந்தி வலயத்துள்
ஒத்துஅங் கிருந்து உயிருண்ணு
மாறுபோல்
அத்தனும் ஐம்பொறி ஆடகத்துள்

நின்று
சத்த முதல்ஐந்தும் தான்உண்ணு
மாறே. 4

2171
வைச்சன வச்சு வகையிரு பத்தஞ்சும்
உச்சம் உடன்அணை வான்ஒரு
வன்உளன்
பிச்சன் பெரியன் பிறப்பிலி
என்றென்று
நச்சி அவனருள் நான்உய்ந்த வாறே.
5

2172
நாலா றுடன்புருடன் நல்தத்
துவமுடன்
வேறான ஐ ஐந்து மெய்ப்புரு
டன்பரன்

கூறா வியோமம் பரம்எனக்
கொண்டனன்
வேறான நாலேழு வேதாந்த
தத்துவமே. 6

2173
ஏலங்கொண்டு ஆங்கே இடையொடு
பிங்கலை
கோலங்கொண்டு ஆங்கே
குணத்துடன் புக்கு
மூலங்கொண்டு ஆங்கே முறுக்கிமுக்
கோணிலும்
காலங்கொண் டான்அடி காணலும்
ஆமே. 7

2174
நாடிகள் பத்தும் நலந்திகழ் வாயுவும்
ஓடிய காலில் ஒடுங்கி யிருந்திடும்

கூடிய காமம் குளிக்கும் இரதமும்
நாடிய நல்ல மனமும் உடலிலே. 8

2175
ஆவன ஆக அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக்
கண்டவன்
ஏவன செய்யும் இலங்கிழை
யோனே. 9

2176
பத்தொடு பத்துமோர் மூன்றும்
பகுதியும்
உய்த்த துரியமும் உள்ளுணர்
காலமும்
மெய்த்த வியோமமும் மேலைத்
துரியமும்

தத்துவ நாலேழ் எனஉன்னத் தக்கதே. 10

2177
விளங்கிடு முந்நூற்று முப்பதோடு ஒருபான்
தளங்கொள் இரட்டிய தாறு நடந்தால்
வணங்கிடும் ஐம்மலம் வாயு எழுந்து
விளங்கிடும் அவ்வழி தத்துவம் நின்றே. 11

2178
நாலொரு கோடியே நாற்பத்தொண் ணாயிரம்
மேலுமோர் ஐந்நூறு வேறாய் அடங்கிடும்
பாலவை தொண்ணூறோடு ஆறுள் படும்அவை

கோலிய ஐ ஐந்துள் ஆகும்
குறிக்கிலே. 12

2179
ஆகின்ற தொண்ணூறோடு ஆறும்
பொதுஎன்பர்
ஆகின்ற ஆறாறு அருஞ்சைவர்
தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி
வயிணவர்க்கு
ஆகின்ற நாலாறுஐ ஐந்துமாயா
வாதிக்கே. 13

2180
தத்துவ மானது தன்வழி நின்றிடில்
வித்தக னாகி விளங்கி யிருக்கலாம்
பொய்த்துவ மாம்அவை போயிடும்
அவ்வழி

தத்துவம் ஆவது அகார எழுத்தே. 14

2181
அறிவொன் றிலாதன ஐஏழும்
ஒன்றும்
அறிகின்ற என்னை அறியாது
இருந்தேன்
அறிகின்றாய் நீஎன்று அருள்செய்தார்
நந்தி
அறிகின்ற நானென்று அறிந்து
கொண்டேனே. 15

2182
சாக்கிர சாக்கிர மாதி தனில்ஐந்தும்
ஆக்கும் மலாவத்தை ஐந்து நனவாதி
போக்கி இவற்றொடும் பொய்யான
ஆறாறு
நீக்கி நெறிநின்றுஒன்று ஆகியே

நிற்குமே. 16

2183
ஆணவ மாதி மலம்ஐந்து
அவரோனுக்கு
ஆணவ மாதிநான் காம்மாற்கு
அரனுக்கு
ஆணவ மாதிமூன்று ஈசர்க்கு
இரண்டென்ப
ஆணவம் ஒன்றே சதாசிவற்கு
ஆவதே.

5. அத்துவாக்கள்

2184
தத்துவம் ஆறாறு தன்மனு ஏழ்கோடி
மெய்த்தரு வன்னம்ஐம் பான்ஒன்று
மேதினி

ஒத்துஇரு நூற்றுஇரு பான்நான்குஎண்
பான்ஒன்று
வைத்த பதம்கலை ஓர்ஐந்தும்
வந்தவே. 1

2185
நாடிய மண்டலம் மூன்றும்
நலந்தெரிந்து
ஓடும் அவரோடு உள்இரு
பத்துஐஞ்சும்
கூடுவர் கூடிக் குறிவழி யேசென்று
தேடிய பின்னர்த் திகைத்திருந்
தார்களே. 2

2186
சாக்கிர சாக்கிர மாதித் தலையாக்கி
ஆக்கிய தூலம் அளவாக்கி
அதீதத்துத்

தாக்கிய அன்பான தாண்டவம்
சார்ந்துஅது
தேக்கும் சிவமாதல் ஐந்தும்
சிவாயவே. 3

6. சுத்த நனவாதி பருவம்
2187
நானவாதி தூலமே சூக்கப் பகுதி
அனதான ஐஐந்தும் விந்துவின் சத்தி
தனதாம் உயிர்விந்து தான்நின்று
போந்து
கனவா நனவில் கலந்ததுஇவ் வாறே.
1

2188
நனவில் அதீதம் பிறந்தார் கிடந்தார்
நனவில் துரியம் நிகழ்ந்தார்
தவழ்ந்தார்

நனவில் சுழுத்தி நடந்தார் வளர்ந்தார்
நனவில் கனவுஓட நன்செய்தி
யானதே. 2

2189
செறியுங் கிரியை சிவதத் துவமாம்
பிறிவில் சுகயோகம் பேரருள் கல்வி
குறிதல் திருமேனி குணம்பல வாகும்
அறிவில் சராசரம் அண்டத் தளவே. 3

2190
ஆதி பரஞ்சிவம் சத்தி சதாசிவம்
ஏதம்இல் ஈசன்நல் வித்தியா தத்துவம்
போதம் கலைகாலம் நியதிமா மாயை
நீதிஈ றாக நிறுத்தினன் என்னே. 4

2191
தேச திகழ்சிவம் சத்தி சதாசிவம்

ஈசன் அனல்வித்தை இராகம்
கலைகாலம்
மாசகல் வித்தை நியதி மகாமாயை
ஆசில் புருடாதி ஆன்மாஈ றாறே. 5

2192
ஆணவம் மாயையும் கன்மமும்
ஆம்மலம்
காணும் முளைக்குத் தவிடுஉமி
ஆன்மாவும்
தாணுவை ஒவ்வாமல் தண்டுலமாய்
நிற்கும்
பேணுவாய் மற்றுநின் பாசம்
பிரித்தே. 6

2193
பசுக்கள் பலவண்ணம் பாலொரு
வண்ணம்

பசுக்களை மேய்க்கின்ற ஆயன்
ஒருவண்ணம்
பசுக்களை மேய்க்கின்ற ஆயன்கோல்
போடில்
பசுக்கள் தலைவனைப் பற்றி
விடாவே. 7

2194
உடல்இந் தியம்மனம் ஒண்புத்தி
சித்தம்
அடலொன்று அகந்தை அறியாமை
மன்னிக்
கெடும்அவ் வுயிர்மயல் மேலும்
கிளைத்தால்
அடைவது தான்ஏழ் நரகத்து ளாயே.
8

2195

தன்தெரியாத அதீதம்தற்கு ஆணவம்
சொல்தெரி கின்ற துரியம்சொல்
காமியம்
பெற்ற சுழுத்திப்பின் பேசுறும்
காதலாம்
மற்றது உண்டிக் கனவுநன வாதலே. 9

2196
நனவில் கனவுஇல்லை ஐந்து நனவில்
கனவிலாச் சூக்குமம் காணும் சுழுத்தி
தனலுண் பகுதியே தற்கூட்டும்
மாயை
நனவில் துரியம் அதீதம் தலைவந்தே.
10

2197
ஆறாறில் ஐஐந்து அகல நனாநனா
ஆறாம் அவைவிட ஆகும்

நனாக்கனா
வேறான ஐந்தும் விடவே
நனாவினில்
ஈறாம் சுழுத்தி இதில்மாயை தானே.
11

2198
மாயையில் வந்த புருடன் துரியத்தில்
ஆய முறைவிட்டு அதுவும்தான்
அன்றாகிச்
சேயதே வலவித் துடன் செல்லச்
சென்றக்கால்
ஆய தனுவின் பயனில்லை யாமே.
12

2199
அதீதத் துரியத்து அறிவனாம்
ஆன்மா

அதீதத் துரியம் அதனால் புரிந்தால்
அதீதத்து எழுந்து அறிவாகிய மானன்
முதிய அனலில் துரியத்து முற்றுமே.
13

2200
ஐஐந்து பத்துடன் ஆனது சாக்கிரம்
கைகண்ட ஐஐந்தில் கண்டம்
கனாஎன்பர்
பொய்கண்ட மூவர் புருடன்
சுழுனையின்
மெய்கண்டவன்உந்தி மேவல்
இருவரே. 14

2201
புரியட் டகமே பொருந்தல் நனவு
புரியட் டகந்தன்னில் மூன்று கனவு
புரியட் டகத்தில் இரண்டு கழுத்தி

புரியட் டகத்தொன்று புக்கல்
துரியமே. 15

2202
நனவில் நனவு புனலில் வழக்கம்
நனவிற் கனவு நினைத்தல் மறத்தல்
நனவிற் சுழுத்திஉள் நாடல் இலாமை
நனவில் துரியம் அதீதத்து நந்தியே.
16

2203
கனவில் நனவுபோல் காண்டல்
நனவாம்
கனவினில் கண்டு மறத்தல் கனவாம்
கனவில் சுழுத்தியும் காணாமை
காணல்
அனுமாதி செய்தலில் ஆன துரியமே.
17

2204
சுழுத்தி நனவுஒன்றும் தோன்றாமை
தோன்றல்
சுழுத்தி கனவுஅதன் உண்மை
சுழுத்தியில்
சுழுத்தி அறிவுஅறி வாலே அழிகை
சுழுத்தித் துரியமாம் சொல்லறும்
பாழே. 18

2205
துரிய நனவாம் இதமுணர் போதம்
துரியக் கனவாம் அகமுணர் போதம்
துரியச் சுழுத்தி வியோமம் துரியம்
துரியம் பரமெனத் தோன்றிடும்
தானே. 19

2206

அறிவுஅறி கின்ற அறிவு நனவாம்
அறிவுஅறி யாமை அடையக்
கனவாம்
அறிவுஅறி அவ்அறி யாமை சுழுத்தி
அறிவுஅறி வாகும் ஆன துரியமே.
20

2207
தான் எங்கும் ஆயவன் ஐம்மலம்
தான்விட்டு
ஞானம் தனதுரு வாகி நயந்தபின்
தான்எங்கு மாய்நெறி நின்றது
தான்விட்டு
மேல்நந்தச் சூக்கம் அவைவண்ணம்
மேலிட்டே. 21

2208
ஐஐந்தும் ஆறும்ஓர் ஐந்தும்

நனாவினில்
எய்யும் நனவு கனவு சுழுத்தியாம்
மெய்யும்பின் சூக்கமும் மெய்ப்பகுதி
மாயை
ஐயமும் தான்அவன் அத்துரி
யத்தனே. 22

2209
ஈதென்று அறிந்திலன் இத்தனை
காலமும்
ஈதென்று அறிந்தபின் ஏதும்
அறிந்திலேன்
ஈதென்று அறியும் அறிவை
அறிந்தபின்
ஈதென்று அறியும் இயல்புடை
யோனே. 23

2210

உயிர்க்குஉயி ராகி உருவாய்
அருவாய்
அயல்புணர் வாகி அறிவாய்ச்
செறிவாய்
நயப்புறு சத்தியும் நாதன் உலகாதி
இயற்பின்றி எல்லாம் இருண்மூட
மாமே. 24

2211
சத்தி இராகத்தில் தான்நல் உயிராகி
ஒத்துறி பாச மலம்ஐந்தோடு ஆறாறு
தத்துவ பேதம் சமைத்துக் கருவியும்
வைத்தனன் ஈசன் மலம்அறு மாறே.
25

2212
சாக்கிரா தீதத்தில் ஆணவம்
தன்னுண்மை

சாக்கிரா தீதம் துரியத்தில் தானுறச்
சாக்கிரா தீதத்தில் ஆணவம் தான்விடாச்
சாக்கிரா தீதம் பரன்உண்மை தங்குமே. 26

2213
மலக்கலப் பாலே மறைந்தது சத்தி
மலக்கலப் பாலே மறைந்தது ஞானம்
மலக்கலப் பாலே மறைந்தனன் தாணு
மலக்கலப்பு அற்றால் மதியொளி யாமே. 27

2214
திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று
நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு

வகைக்கின்ற நெஞ்சினுள்
ஆனைக்கன்று ஐந்து
பகைக்கின்ற நெஞ்சுக்குப் பாலிரண்
டாமே. 28

2215
கதறு பதினெட்டுக் கண்களும் போகச்
சிதறி எழுந்திடுஞ் சிந்தையை நீரும்
விதறு படாமுன்னம் மெய்வழி
நின்றால்
அதிர வருவதோர் ஆனையும் ஆமே.
29

2216
நனவகத் தேயொரு நாலைந்தும்
வீடக்
கனவகத் தேஉள் கரணங்க ளோடு
முனவகத் தேநின்று உதறியுட் புக்கு

நினைவகத்து இன்றிச் சுழுத்திநின்
றானே. 30

2217
நின்றவன் ஆசான் நிகழ்துரி
யத்தனாய்
ஒன்றி உலகின் நியமாதிகள் உற்றுச்
சென்று துரியாதீ தத்தே சிலகாலம்
நின்று பரனாய் நின்மல னாமே. 31

2218
ஆனஅவ் ஈசன் அதீதத்தில்
வித்தையாத்
தான்உலகு உண்டு சதாசிவ மாசத்தி
மேனிகள் ஐந்தும்போல் விட்டுச்
சிவமாகி
மோனம் அடைந்தொளி மூலத்
னாமே. 32

2219
மண்டலம் மூன்றினுள் மாயநன்
நாடனைக்
கண்டுகொண்டு உள்ளே கருதிக்
கழிகின்ற
விண்டவர் தாமரை மேலொன்றும்
கீழாக
அண்டமும் தானாய் அகத்தினுள்
ஆமே. 33

2220
போதறி யாது புலம்பின புள்ளினம்
மாது அறி யாவகை நின்று மயங்கின
வேதுஅறி யாவணம் நின்றனன்
எம்இறை
சூதறி வாருச்சி சூடிநின் றாரே. 34

2221
கருத்தறிந்து ஒன்பது கண்டமும்
ஆங்கே
பொருந்தறிந் தேன்புவ னாபதி நாடித்
திருத்தறிந் தேன்மிகு தேவர் பிரானை
பருத்தறிந் தேன்மனம் மன்னிநின்
றேனே. 35

2222
ஆன விளக்கொளி தூண்டும் அவன்
என்னத்
தான விளக்கொளி யாம்மூல
சாதனத்து
ஆன விதிமூலத் தானத்தில்
அவ்விளக்கு
ஏனை மதிமண்ட லம்கொண்டு
எரியுமே. 36

2223
உள்நாடும் ஐவர்க்கு மண்டை
ஒதுங்கிய
விண்நாட நின்ற வெளியை
வினவுறில்
அண்ணாந்து பார்த்துஐவர் கூடிய
சந்தியில்
கண்நாடி காணும் கருத்ததுஎன்
றானே. 37

2224
அறியாத வற்றை அறிவான்
அறிவான்
அறிவான் அறியாதான் தன்னறிவு
ஆகான்
அறியா தவத்தை அறிவானைக்
கூட்டி
அறியாது அறிவானை

யார்அறிவாரே. 38

2225
துரிய தரிசனம் சொற்றோம்
வியோமம்
அரியன தூடணம் அந்தண வாதி
பெரியன கால பரம்பின் துரியம்
அரிய அதீதம் அதீதத்த தாமே. 39

2226
மாயையிற் சேதனன் மன்னும்
பகுதியோன்
மாயையின் மற்றது நீவுதல்
மாயையாம்
கேவல மாகும் சகலமா யோனியுள்
தோயும் மனிதர் துரியத்துள் சீவனே.
40

## 7. கேவல சகல சுத்தம்

2227

தன்னை அறிசுத்தன் தற்கேவ
லன்தானும்
பின்னம் உறநின்ற பேத சகலனும்
மன்னிய சத்தசத் துச்சத சத்துடன்
துன்னவர் தத்தம் தொழில்கள்
வாகவே. 1

2228

தானே தனக்குப் பகைவனும்
நட்டானும்
தானே தனக்கு மறுமையும்
இம்மையும்
தானே தான்செய்த வினைப்பயன்
துய்ப்பானும்
தானே தனக்குத் தலைவனும் ஆமே.

2229
ஆமுயிர் கேவலம் மாமாயை
யின்நடந்து
ஆம்உயிர் மாயை எறிப்ப அறிவுற்று
காமியம் மாமேய மும்கல வாநிற்பத்
தாம்உறு பாசம் சகலத்து ஆமே. 3

2230
சகல அவத்தையில் சார்ந்தோர் சகலர்
புகலும் மலம்மூ வகையும்
புணர்ந்தோர்
நிகரில் மலரோன்மால் நீடுபல்
தேவர்கள்
நிகழ்நரர் சீடம் அந்தமும் ஆமே. 4

2231

தாவிய மாயையில் தங்கும் பிரளயம்
மேவிய மற்றது உடம்பாய்மிக்
குள்ளன
ஓவல் இலக்கணர் ஒன்றிய சீகண்டர்
ஆவயின் நூற்றெட்டு உருத்திர
ராமே. 5

2232
ஆகின்ற கேவலத்து ஆணவத்து
ஆனவர்
ஆகின்ற வித்தேச ராம்அனந் தாதியர்
ஆகின்ற எண்மர் எழுகோடி மந்திரர்
ஆகின்ற ஈசர் அநேகரும் ஆமே. 6

2233
ஆம்அவ ரில்சிவ னார்அருள்
பெற்றுளோர்
போம்மலந் தன்னால் புகழ்விந்து

நாதம்விட்டு
ஓம்மய மாகி ஒடுங்கலின் நின்மலம்
தோம்அறும் சுத்த அவத்தைத்
தொழிலே. 7

2234
ஓரினும் மூவகை நால்வகை யும்உள
தேரில் இவைகே வலம்மாயை
சேர்இச்சை
சார்இய லாயவை தாமே தணப்பவை
வாரிவைத்து ஈசன் மலம்அறுத்
தானே. 8

2235
பொய்யான போதாந்தம் ஆறாறும்
விட்டகன்று
எய்யாமை நீங்கவே எய்தவன்
தானாகி

மெய்யாம் சராசர மாய்வெளி
தன்னுட்புக்கு
எய்தாமல் எய்தும்சுத் தாவத்தை
என்பதே. 9

2236
அனாதி பசுவியாத்தி யாகும்
இவனை
அனாதியில் வந்த மலம்ஐந்தால்
ஆட்டி
அனாதியில் கேவலம் அச்சக
லத்திட்டு
அனாதி பிறப்புறச் சுத்தத்துள்
ஆகுமே. 10

2237
அந்தரம் சுத்தாவத் தைகே வலத்தாறு
தந்தோர்தம் சுத்தகே வலத்தற்ற

தற்பரத்
தின்பால் துரியத் திடையே அறிவுறத்
தன்பால் தனையறி தத்துவந் தானே.
11

2238
ஐ ஐந்து ஒடுங்கும் ஆன்மாவில்
ஆன்மாவும்
மெய்கண்டு சுத்த அவத்தையில்
வீடாகும்
துய்யஅவ் வித்தை முதன்மூன்றும்
தொல்சத்தி
ஐயன் சிவன்சத்தி யாம்தோற்றம்
அவ்வாறே. 12

2239
ஐஐந்தும் ஆன்மாவில் ஆறோடு
அடங்கியும்

மெய்கண்ட மேல்மூன்றும்
மேவுமெய் யோகத்தில்
கைகண்ட சத்தி சிவபாகத் தேகாண
எய்யும் படியடங்கும் நாலேழ்
எய்தியே. 13

2240
ஆணவத் தார்ஒன்று அறியாத
கேவலர்
பேணிய மாயைப் பிரளயா கலராகும்
காணும் உருவினர் காணாமை
காண்பவே
பூணும் சகலர்முப் பாசமும்
புக்கோரே. 14

2241
ஆணவம் ஆகும் விஞ்ஞான
கலருக்குப்

பேணிய மாயை பிரளயா கலருக்கே
ஆணவ மாயையும் கன்மம்
மூன்றுமே
காணும் சகலர்க்குக் காட்டும்
மலங்களே 15

2242
கேவலம் தன்னில் கிளர்ந்தவிஞ்
ஞாகலர்
கேவலம் தன்னில் கிளர்விந்து
சத்தியால்
பூவயின் கேவலத்து அச்சக
லத்தையும்
மேவிய மந்திர மாமாயை
மெய்ம்மையே. 16

2243
மாயையில் மன்னும் பிரளயா

கலர்வந்து
மாயையும் தோன்றா வகைநிற்க
ஆணவ
மாய சகலத்துக் காமிய மாமாயை
ஏயமன் நூற்றெட்டு உருத்திரர்
என்பவே. 17

2244
மும்மலம் கூடி முயங்கி
மயங்குவோர்
அம்மெய்ச் சகலத்தர் தேவர் சுரர்நரர்
மெய்ம்மையில் வேதா விரிமிகு
கீடாந்தத்து
அம்முறை யோனிபுக்கு ஆர்க்கும்
சகலரே. 18

2245
சுத்த அவத்தையில் தோய்ந்தவர்

மும்மலச்
சத்துஅசத்து ஓடத் தனித்தனி பாசமும்
மத்த இருள்சிவ னான கதிராலே
தொத்தற விட்டிடச் சுத்தஆ வார்களே.
19

2246
தற்கே வலம்முத்தி தானே
தனிமையாம்
பிற்பால் சகலம் கலாதிப் பிறிவதாம்
சொற்பால் புரிசுத்த கேவலம்
சாக்கிரம்
தற்பால் புரிவது தற்சுத்தம் ஆமே. 20

2247
அறிவின்றி முத்தன் அராகாதி
சேரான்
குறியொன்றி லாநித்தன் கூடான்

காலதி
செறியும் செயலிலான் தினங்கற்ற
வல்லோன்
கிறியன் மலவியாபி கேவலம் தானே.
21

2248
விந்துவும் மாயையும் மேவும்
கிரியையும்
சந்தத ஞான பரையும் தனுச்சுத்தி
விந்துவின் மெய்ஞ்ஞான மேவும்
பிரளயர்
வந்த சகலசுத் தான்மாக்கள்
வையத்தே. 22

2249
கேவல மாதியின் பேதம் கிளக்குறில்
கேவல மூன்றும் கிளரும் சகலத்துள்

ஆவயின் மூன்று மதிசுத்த மூடவே
ஓவலில் லாஒன்பான் ஒற்றுணர்
வோர்கட்கே. 23

2250
கேவலத்தில் கேவலம் அதீதா தீதம்
கேவலத் தில்சகலங்கள் வயிந்தவம்
கேவத் திறசுத்தம் கேடில்விஞ்
ஞாகலர்க்கு
ஆவயின் நாதன் அருண்மூர்த்தி
தானே. 24

2251
சகலத்தில் கேவலம் சாக்கிரா தீதம்
சகல சகலமே சாக்கிர சாக்கிரம்
சகலத்திற் சுத்தமே தற்பரா வத்தை
சகலத்தில் இம்மூன்று தன்மையும்
ஆமே. 25

2252
சுத்தத்தில் சுத்தமே தொல்சிவ
மாகுதல்
சுத்தத்தில் கேவலம் தொல்லுப
சாந்தமாம்
சுத்த சகலம் துரிய விலாசமாம்
சுத்தத்தில் இம்மூன்றும் சொல்லலும்
ஆமே. 26

2253
சாக்கிர சாக்கிரம் தன்னில்
கனவொடுஞ்
சாக்கிரம் தன்னில் சுழுத்தி துரியமே
சாக்கிரா தீதம் தனிற்சுகா னந்தமே
ஆக்கு மறையாதி ஐம்மல பாசமே.
27

2254
சாக்கிரா தீதத்தில் தானறும் ஆணவம்
சாக்கிரா தீதம் பிராவத்தை தங்காது
ஆக்கு பரோபதி யாஉப சாந்தத்தை
நோக்கும் மலங்குணம் நோக்குதல்
ஆகுமே. 28

2255
பெத்தமும் முத்தியும் பேணும்
துரியமும்
சுத்த அதீதமும் தோன்றாமல்
தானுணும்
அத்தன் அருள்என்று அருளால்
அறிந்தபின்
சித்தமும் இல்லை செயல்இல்லை
தானே. 29

2256

எய்திய பெத்தமும் முத்தமும்
என்பன
எய்தும் அரன்அரு ளேவிளை
யாட்டோ டு
எய்திடு உயிர்சுத்தத் திடுநெறி
என்னவே
எய்தும் உயிர்இறை பால்அறி வாமே.
30

2257
ஐம்மலத் தாரும் மதித்த சகலத்தர்
ஐம்மலத் தாரும் அருவினைப்
பாசத்தார்
ஐம்மலத் தார்சுவர்க் கந்நெறி
யான்பவர்
ஐம்மலத் தார்அர னார்க்குஅறி
வோரே. 31

2258
கருவில் அதீதம் கலப்பிக்கும் மாயை
அரிய துரியம் அதிலுண்ணும்
ஆசையும்
உரிய கழுனை முதல்எட்டும்
சூக்கத்து
அரிய கனாத்துலம் அந்தன வாமே.
32

2259
ஆணவம் ஆகும் அதிதம்மேல்
மாயையும்
பூணும் துரியம் சுழுத்திபொய்க்
காமியம்
பேணும் கனவும் மாமாயை
திரோதாயி
காணும் நனவில் மலக்கலப்பு
ஆகுமே. 33

2260
அரன்முத லாக அறிவோன்
அதீதத்தன்
அரன்முத லாமாயை தங்கிச் சுழுனை
கருமம் உணர்ந்து மாமாயைக்
கைகொண்டோ ர்
அருளும் அறைவார் சகலத்துற்
றாரே. 34

2261
உருவுற்றுப் போகமே போக்கியம்
துற்று
மருவுற்றுப் பூதம னாதியான் மன்னி
வரும்அச் செயல்பற்றிச் சத்தாதி
வைகிக்
கருவுற் றிடுஞ் சீவன் காணும்
சகலத்தே. 35

2262
இருவிடை ஒத்திட இன்னருள் சத்தி
மருவிட ஞானத்தில் ஆதனம்
மன்னிக்
குருவினைக்கொண்டருள் சத்திமுன்
கூட்டிப்
பெருமலம் நீங்கிப் பிறவாமை
சுத்தமே. 36

2263
ஆறாறும் ஆறதின் ஐ ஐந்து
அவத்தையோடு
ஈறாம் அதீதத் துரியத்து இவன்எய்தப்
பேறான ஐவரும் போம்பிர காசத்து
நீறார் பரம்சிவம் ஆதேய மாகுமே.
37

2264
தன்னை அறியாது உடலைமுன்
தான்என்றான்
தன்னைமுன் கண்டான் துரியம்
தனைக்கண்டான்
உன்னும் துரியமும் ஈசனோடு
ஒன்றாக்கால்
பின்னையும் வந்து பிறந்திடும்
தானே. 38

2265
சாக்கிரத் தன்னில் அதீதம்
தலைப்படில்
ஆக்கிய அந்த வயிந்தவம் ஆனந்தம்
நோக்கும் பிறப்புஅறும் நோன்முத்தி
சித்தியாம்
வாக்கும் மனமும் மருவல்செய்
யாவே. 39

2266
அப்பும் அனலும் அகலத்து ளேவரும்
அப்பும் அனலும் அகலத்து ளேவாரா
அப்பும் அனலும் அகலத்துள்
ஏதெனில்
அப்பும் அனலும் கலந்ததுஅவ்
வாறே. 40

2267
அறுநான்கு அசுத்தம் அதிசுத்தா
சுத்தம்
உறும்ஏழு மாயை உடன்ஐந்தே
சுத்தம்
பெறுமாறு இவைமூன்றும்
கண்டத்தால் பேதித்து
உறும்மாயை மாமாயை ஆன்மாவி
னோடே. 41

2268

மாயைகைத் தாயாக மாமாயை ஈன்றிட
ஆய பரசிவன் தந்தையாய் நிற்கவே
ஏயும் உயிர்க்கே வலசகலத்து எய்தி
ஆய்தரு சுத்தமும் தான்வந்து அடையுமே. 42

## 8. பராவத்தை

2269

அஞ்சும் கடந்த அனாதி பரன்தெய்வம்
நெஞ்சம தாய நிமலன் பிறப்பிலி
விஞ்சும் உடலுயிர் வேறு படுத்திட
வஞ்சத் திருந்த வகையறிந் தேனே. 1

2270

சத்தி பராபரம் சாந்தி தனிலான
சத்தி பரானந்தம் தன்னில் சுடர்விந்து
சத்திய மாயை தனுச்சத்தி ஐந்துடன்
சத்தி பெறுமுயிர் தான்அங்கத்து
ஆறுமே. 2

2271

ஆறாறுக்கு அப்பால் அறிவார்
அறிபவர்
ஆறாறுக்கு அப்பால் அருளார்
பெறுபவர்
ஆறாறுக்கு அப்பால் அறிவாம்
அவர்கட்கே
ஆறாறுக்கு அப்பால் அரன்இனி
தாமே. 3

2272

அஞ்சொடு நான்கும் கடந்துஅக
மேபுக்குப்
பஞ்சணி காலத்துப் பள்ளி
துயில்கின்ற
விஞ்சையர் வேந்தனும் மெல்லிய
லாளொடு
நஞ்சுற நாடி நயம்செய்யு மாறே. 4

2273
உரிய நனாத்துரி யத்தில் இவளாம்
அரிய துரிய நனவாதி மூன்றில்
பரிய பரதுரி யத்தில் பரனாம்
திரிய வரும்துரி யத்தில் சிவமே. 5

2274
பரமாம் அதீதமே பற்றறப் பற்றப்
பரமாம் அதீதம் பயிலப் பயிலப்
பரமாம் அதீதம் பயிலாத் தபோதனார்

பரமாகார் பாசமும் பற்றொன்றுஅ
றாதே. 6

2275
ஆயும்பொய்ம் மாயை அகம்புற
மாய்நிற்கும்
வாயு மனமும் கடந்துஅம் மயக்கறின்
தூய அறிவு சிவானந்த மாகிப்போய்
வேயும் பொருளாய் விளைந்தது
தானே. 7

2276
துரியப் பரியில் இருந்தஅச் சீவனைப்
பெரிய வியாக்கிரத் துள்ளே
புகவிட்டு
நரிகளை ஓடத் துரத்திய நாதர்க்கு
உரிய வினைகள் நின்று ஓலமிட்
டன்றே. 8

2277
நின்றஇச் சாக்கிர நீள்துரி யத்தினின்
மன்றனும் அங்கே மணம்செய்ய
நின்றிடும்
மன்றன் மணம்செய்ய மாயை
மறைந்திடும்
அன்றே இவனும் அவன்வடி வாமே.
9

2278
விரிந்திடில் சாக்கிரம் மேவும்
விளக்காய்
இருந்த இடத்திடை ஈடான மாயை
பொருந்தும் துரியம் புரியல்தா
னாகும்
தெரிந்த துரியத்துத் தீதுஅக லாதே.
10

2279
உன்னை அறியாது உடலைமுன்
நான்ஒன்றாய்
உன்னை அறிந்து துரியத்து
உறநின்றாய்
தன்னை அறிந்தும் பிறவி
தணவாதால்
அன்ன வியாத்தன் அமலன் என்று
அறிதியே. 11

2280
கருவரம்பு ஆகிய காயம் துரியம்
இருவரும் கண்டீர் பிறப்புஇறப்பு
உற்றார்
குருவரம் பெற்றவர் கூடிய பின்னை
இருவரும் இன்றிஒன் றாகி நின்
றாரே. 12

2281
அணுவின் துரியத்தில் ஆன நனவும்
அணுஅசை வின்கண் ஆனகனவும்
அணுஅசை வில்பரா தீதம் கழுத்தி
பணியில் பரதுரி யம்பர மாமே. 13

2282
பரதுரி யத்து நனவும் பரந்து
விரிசகம் உண்ட கனவும்மெய்ச்
சாந்தி
உருவுறு கின்ற சுழுத்தியும் ஒவத்
தெரியும் சிவதுரி யத்தனு மாமே. 14

2283
பரமா நனவின்பின் பால்சக முண்ட
திரமார் கனவும் சிறந்த சுழுத்தி
உரமாம் உபசாந்தம் உற்றல் துறவே

தரனாம் சிவதுரி யத்தனும் ஆமே. 15

2284
சீவன் துரியம் முதலாகச் சீரான
ஆவ சிவன்துரி யாந்தம்
அவத்தைபத்தும்
ஓவும் பராநந்தி உண்மைக்குள்
வைகியே
மேவிய நாலேழ் விடுவித்துநின்
றானே. 16

2285
பரம்சிவன் மேலாம் பரமம் பரத்தில்
பரம்சிவன் மேலாம் பரநனவாக
விரிந்த கனாவிடர் வீட்டும்
கழுமுனை
உரந்தரும் மாநந்தி யாம்உண்மை
தானே. 17

2286

சார்வாம் பரம்சிவன் சத்தி பரநாதம்
மேலாய விந்து சதாசிவம்
மிக்கோங்கிப்
பாலாய்ப் பிரமன் அரிஅம ராபதி
தேவாம் உருத்திரன் ஈசனாம்
காணிலே. 18

2287

கலப்புஅறி யார்கடல் சூழ்உல
கேழும்
உலப்புஅறி யார்உட லோடுஉயிர்
தன்மை
அலப்புஅறிந்து இங்குஅர சாளகி
லாதார்
குறிப்பது கோலம் அடலது வாமே.
19

2288
பின்னை அறியும் பெருந்தவத்து
உண்மைசெய்
தன்னை அறியில் தயாபரன்
எம்இறை
முன்னை அறிவு முடிகின்ற காலமும்
என்னை அறியலுற்று இன்புற்ற
வாறே. 20

2289
பொன்னை மறைத்தது பொன்னணி
பூடணம்
பொன்னின் மறைந்தது பொன்னணி
பூடணம்
தன்னை மறைத்தது தன்கர
ணங்களாம்
தன்னின் மறைந்தது தன்கர

ணங்கேளே. 21

2290
மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தை மறைந்தது பார்முதல்
பூதமே. 22

2291
ஆறாறு ஆகன்று நமவிட்டு அறிவாகி
வேறான தானே யகாரமாய்
மிக்கோங்கி
ஈறார் பரையின் இருளற்ற தற்பரன்
பேறார் சிவாய அடங்கும் பின்
முத்தியே. 23

2292

துரியத்தில் ஓரைந்தும் சொல்அக ராதி
விரியப் பரையில் மிகும்நாதம்
அந்தம்
புரியப் பரையில் பராவத்தா போதம்
திரிய பரமம் துரியம் தெரியவே. 24

2293
ஐந்தும் சகலத்து அருளால் புரிவற்றுப்
பந்திடும் சுத்த அவத்தைப்
பதைப்பினில்
நந்தி பராவத்தை நாடச் சுடர்முனம்
அந்தி இருள்போலும் ஐம்மலம்
மாறுமே. 25

2294
ஐஐந்து மட்டுப் பகுதியும் மாயையும்
பொய்கண்ட மாமாயை தானும்
புருடன்கண்டு

எய்யும் படியாய் எவற்றுமாய்
அன்றாகி
உய்யும் பராவத்தை உள்ளுதல்
சுத்தமே. 26

2295
நின்றான் அருளும் பரமும்முன்
நேயமும்
ஒன்றாய் மருவும் உருவும் உபாதியும்
சென்றான் எனைவிடுத்து ஆங்கிச்
செல்லாமையும்
நன்றான ஞானத்தின் நாதப் பிரானே.
27

## 9. முக்குண நிர்க்குணம்

2296
சாத்திகம் எய்தும் நனவெனச்

சாற்றுங்கால்
வாய்ந்த இராசதம் மன்னும்
கனவென்ப
ஒய்த்திடும் தாமதம் உற்ற
சுழுத்தியாம்
மாய்த்திடும் நிற்குணம் மாசில்
துரியமே. 1

## 10. அண்டாதி பேதம்

2297
பெறுபகி ரண்டம் பேதித்த அண்டம்
எறிகடல் ஏழின் மணல்அள வாகப்
பொறியொளி பொன்னணி யென்ன
விளங்கிச்
செறியும் அண் டாசனத் தேவர்
பிரானே. 1

2298
ஆனந்த தத்துவம் அண்டா
சலத்தின்மேல்
மேனிஐந்தாக வியாத்தம்முப்
பத்தாறாய்க்
தான்அந்த மில்லாத தத்துவம்
ஆனவை
ஈனமி லா அண்டத்து எண்மடங்கு
ஆமே.

11. பதினோராம் தானமும்
அவத்தையெனக் காணல்

2299
அஞ்சில் அமுதும்ஓர் ஏழின்கண்
ஆனந்தம்
முஞ்சில்ஓங் காரம் ஓர் ஒன்பான்
பதினொன்றில்

வஞ்சக மேநின்று வைத்திடில்
காயமாம்
கிஞ்சுகக் செவ்வாய்க் கிளிமொழி
கேளே. 1

2300
புருட னுடனே பொருந்திய சித்தம்
அருவமொ டாறும் அதீதத் துரியம்
விரியும் சுழுத்தியின் மிக்குள்ள
எட்டும்
அரிய பதினொன்று மாம்அவ்
அவத்தையே. 2

2301
காட்டும் பதினொன்றும் கைகலந்
தால்உடல்
நாட்டி அழுத்திடின் நந்திஅல்லால்
இல்லை

ஆட்டம்செய் யாத அதுவிதி
யேநினை
ஈட்டு மதுதிடம் எண்ணலும் ஆமே. 3

## 12. கலவு செலவு

## 2302

கேவலம் தன்னில் கலவச் சகலத்தின்
மேவும் செலவு விடவரு நீக்கத்துப்
பாவும் தனைக்கண்டால் மூன்றும்
படர்வற்ற
தீதறு சாக்கிரா தீதத்தில் சுத்தமே. 1

## 2303

வெல்லும் அளவில் விடுமின்
வெகுளியைச்
செல்லும் அளவும் செலுத்துமின்
சிந்தையை

அல்லும் பகலும் அருளுடன் தூங்கினால்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே. 2

## 13. நின்மல அவத்தை

## 2304

ஊமைக் கிணற்றகத் துள்ளே உறைவதோர்
ஆமையின் உள்ளே அழுவைகள் ஐந்துள
வாய்மையின் உள்ளே வழுவாது ஒடுங்குமேல்
ஆமையின் மேலும்ஓர் ஆயிரத்து ஆண்டே. 1

## 2305

காலங்கி நீர்பூக் கலந்தஆ காயம்

மாலங்கி ஈசன் பிரமன் சதாசிவன்
மேலஞ்சும் ஓடி விரவவல்
லார்கட்குக்
காலனும் இல்லை கருத்தில்லை
தானே. 2

2306
ஆன்மாவே மைந்தன் ஆயினன்
என்பது
தான்மா மறையறை தன்மை
அறிகிலர்
ஆன்மாவே மைந்தன் அரனுக்கு
இவன்என்றால்
ஆன்மாவும் இல்லையால் ஐஐந்தும்
இல்லையே. 3

2307
உதயம் அழுங்கில் ஒடுங்கல்இம்

மூன்றின்
கதிசாக் கிரங்கன வாதி சுழுத்தி
பதிதரு சேதனன் பற்றாம் துரியத்து
அதிசுப னாய்அனந் தான் அந்தி
யாகுமே. 4

2308
எல்லாம்தன் னுட்புக யாவுளும்
தானாகி
நல்லாம் துரியம் புரிந்தக்கால்
நல்லுயிர்
பொல்லாத ஆறாறுள் போகாது
போதமாய்ச்
செல்லாச் சிவகதி சென்றுஎய்தும்
அன்றே. 5

2309
காய்ந்த இரும்பு கனலை

அகன்றாலும்
வாய்ந்த கனலென வாதனை
நின்றாற்போல்
ஏய்ந்த கரணம் இறந்த துரியத்துத்
தோய்ந்த கருமத் துரிசுஅக லாதே. 6

2310
ஆன மறையாதி யாம் உரு
நந்திவந்து
ஏனை அருள்செய் தெரிநனா
அவத்தையில்
ஆன வகையை விடும்அடைத்
தாய்விட
ஆன மாலதீதம் அப்பரந் தானே. 7

2311
சுத்த அதீதம் சகலத்தில் தோய்வுறில்
அத்தன் அருள்நீங்கா ஆங்கணில்

தானாகச்
சித்த சுகத்தைத் தீண்டாச்
சமாதிசெய்து
அத்தனோடு ஒன்றற்கு அருள்முத
லாமே. 8

2312
வேறுசெய் தான்இரு பாதியின்
மெய்த்தொகை
வேறுசெய் தான்என்னை எங்கணும்
விட்டுய்த்தான்
வேறுசெய் யாஅருள் கேவலத்
தேவிட்டு

வேறுசெய் யாஅத்தன் மேவிநின்
றானே. 9

2313

கறங்குஓலை கொள்ளிவட் டம்கட
லில்திரை
நிறஞ்சேர் ததிமத்தன் மலத்தே
நின்றங்கு
அறங்காண் சுவர்க்க நரகம்
புவிசேர்த்து
கிரங்கா உயிர்அரு ளால்இவை
நீங்குமே. 10

2314
தானே சிவமான தன்மை தலைப்பட
ஆன மலமும்அப் பாச பேதமும்
ஆன குணமும் பரான்மா உபாதியும்
பானுவின் முன்மதி போல்பலராவே.
11

2315
நெருப்புண்டு நீருண்டு வாயுவும்

உண்டங்கு
அருக்கனும் சோமனும் அங்கே
அமரும்
திருத்தக்க மாலும் திசைமுகன் தானும்
உருத்திர சோதியும் உள்ளத்து ளாரே.
12

2316
ஆனைகள் ஐந்தம் அடங்கி
அறிவென்னும்
ஞானத் திரியைக் கொளுவி
அதனுட்புக்கு
ஊனை இருளற நோக்கும் ஒருவற்கு
வானகம் ஏற வழிஎளி தாமே. 13

2317
ஆடிய காலில் அசைக்கின்ற
வாயுவும்

தாடித் தெழுந்த தமருக ஓசையும்
பாடி எழுகின்ற வேதாக மங்களும்
நாடியின் உள்ளாக நான்கண்ட
வாறே. 14

2318
முன்னை அறிவினில் செய்த
முதுதவம்
பின்னை அறிவினைப் பெற்றால்
அறியலாம்
தன்னை அறிவது அறிவாம் அஃ
தன்றிப்
பின்னை அறிவது பேயறி வாகுமே.
15

2319
செயலற் றிருக்கச் சிவானந்த மாகும்
செயலற் றிருப்பார் சிவயோகம்

தேடார்
செயலற் றிருப்பார் செகத்தோடுங்
கூடார்
செயலற் றிருப்பார்க்கே செய்தியுண்
டாமே. 16

2320
தான்அவ னாகும் சமாதிகை
கூடினால்
ஆன மலம்அறும் அப்பசுத்
தன்மைபோம்
ஈனமில் காயம் இருக்கும் இருநிலத்து
ஊனங்கள் எட்டும் ஒழித்தொன்று
வோர்கட்கே. 17

2321
தொலையா அரனடி தோன்றும் அம்
சத்தி

தொலையா இருளொளி தோற்ற
அணுவும்
தொலையாத் தொழின்ஞானம்
தொன்மையில் நண்ணித்
தொலையாத பெத்தம்முத் திக்கிடை
தோயுமே. 18

2322
தோன்றிய பெத்தமும் முத்தியும்
சூழ்சத்தி
மான்றும் தெருண்டும் உயிர்பெறும்
மற்றவை
தான்தரு ஞானம் தன் சத்திக்குச்
சாதனாம்
ஊன்றல்இல் லாஉள் ளொளிக்கு ஒளி
யாமே. 19

2323

அறிகின்றி லாதன ஐஏழும் ஒன்றும்
அறிகின்ற என்னை அறியா
திருந்தேன்
அறிகின்றாய் நீயென்று
அருள்செய்தான் நந்தி
அறிகின்ற நானென்று அறிந்துகொண்
டேனே. 20

2324
தான்அவ னாகிய ஞானத்
தலைவனை
வானவ ராதியை மாமணிச் சோதியை
ஈனமில் ஞானத்து இன்னருள்
சத்தியை
ஊனமிலாள்தன்னை ஊனிடைக்
கண்டதே. 21

2325

ஒளியும் இருளும் பரையும் பரையுள்
அளியது எனலாகும் ஆன்மாவை
யன்றி
அளியும் அருளும் தெருளும் கடந்து
தெளிய அருளே சிவானந்த மாமே.
22

2326
ஆனந்த மாகும் அரனருட் சத்தியில்
தான் அந்த மாம்உயிர் தானே
சமாதிசெய்து
ஊன்அந்த மாய் உணர் வாய்உள்
உணர்வுறில்
கோன்அந்தம் வாய்க்கும் மகாவா
கியமாமே. 23

2327
அறிவிக்க வேண்டாம் அறிவற்று

அயர்வோர்க்கும்
அறிவிக்க வேண்டாம் அறிவிற்
செறிவோர்க்கும்
அறிவுற்று அறியாமை எய்திநிற்
போர்க்கே
அறிவிக்கத் தம்அறி வார்அறி
வோரே. 24

2328
சத்தும் அசத்தும் சதசத்தும் தான்கூடிச்
சித்தும் அசித்தும் சிவசித்த
தாய்நிற்கும்
சுத்தம் அசுத்தம் தொடங்காத
துரியத்துச்
சுத்தரா மூன்றுடன் சொல்லற்
றவர்களே. 25

2329

தானே அறியான் அறிவிலோன்
தானல்லன்
தானே அறிவான் அறிவு
சதசத்தென்று
ஆனால் இரண்டும் அரனரு
ளாய்நிற்கத்
தானே அறிந்து சிவத்துடன் தங்குமே.
24

2330
தத்துவ ஞானம் தலைப்பட் டவர்க்கே
தத்துவ ஞானம் தலைப்பட
லாய்நிற்கும்
தத்துவ ஞானத்துத் தான்அவ
னாகவே
தத்துவ ஞானானந் தந்தான்
தொடங்குமே. 27

2331

தன்னை அறிந்து சிவனுடன் தானாக
மன்னும் மலம்குணம் மாளும்
பிறப்பறும்
பின்அது சன்முத்தி சன்மார்க்கப்
பேரொளி
நன்னது ஞானத்து முத்திரை
நண்ணுமே. 28

2332

ஞானம்தன் மேனி கிரியை
நடுஅங்கம்
தானுறும் இச்சை உயிராகத் தற்பரன்
மேனிகொண்டு ஐங்கரு மத்தவித்
தாதலான்
மோனிகள் ஞானத்து முத்திரை பெற்
றார்களே. 29

2333
உயிர்க்குஅறி உண்மை உயிர்இச்சை
மானம்
உயிர்க்குக் கிரியை உயிர்மாயை
சூக்கம்
உயிர்க்குஇவை ஊட்டுவோன்
ஊட்டும் அவனே
உயிர்ச்சொல் அன்றி அவ்வுளத்து
ளானே. 30

2334
தொழில்இச்சை ஞானங்கள்
தொல்சிவசீவர்
கழிவற்ற மாமாயை மாயையின்
ஆகும்
பழியற்ற காரண காரியம் பாழ்விட்டு
அழிவற்ற சாந்தாதீ தன்சிவ னாமே.
31

2335
இல்லதும் உள்ளதும் யாவையும்
தானாகி
இல்லதம் உள்ளது மாய்அன்றாம்
அண்ணலைச்
சொல்வது சொல்லிடில் தூராகி
தூரமென்று
ஒல்லை உணர்ந்தால் உயிர்க்குயி
ராகுமே. 32

2336
உயிரிச்சை யூட்டி உழிதரும் சத்தி
உயிரிச்சை வாட்டி ஒழித்திடும்
ஞானம்
உயிரிச்சை யூட்டி யுடனுறலாலே
உயிரிச்சை வாட்டி உயர்பதஞ்
சேருமே. 33

2337
சேரும் சிவமானார் ஐம்மலம்
தீர்ந்தவர்
ஓர்ஒன்றி லார் ஐம் மலஇருள்
உற்றவர்
பாரின்கண் விண்நர கம்புகும்
பான்மையர்
ஆருங்கண் டோ ரார் அவையருள்
என்றே. 34

2338
எய்தினர் செய்யும் இருமாயா
சத்தியின்
எய்தினர் செய்யும் இருஞான
சத்தியின்
எய்தினர் செய்யும் இருஞால
சத்தியின்

எய்தினர் செய்யும் இறையருள்
தானே. 35

2339
திருந்தினர் விட்டார் திருவில் நரகம்
திருந்தினர் விட்டார் திருவார்
சுவர்க்கம்
திருந்தினர் விட்டார் செறிமலர்
கூட்டம்
திருந்தினர் விட்டார் சிவமாய்
அவமே. 36

2340
அவமும் சிவமும் அறியார் அறியார்
அவமும் சிவமும் அறிவார் அறிவார்
அவமும் சிவமும் அருளால்
அறிந்தால்
அவமும் சிவமும் அவனரு ளாமே.

2341
அருளான சத்தி அனல் வெம்மை
போல
பொருள் அவனாகத்தான் போதம்
புணரும்
இருள் ஒளியாய் மீண்டு மும்மல
மாகும்
திருவருள் ஆனந்தி
செம்பொருளாமே. 38

2342
ஆதித்தன் தோன்ற வரும்பது
மாதிகள்
பேதித்த தவ்வினை யாற்செயல்
சேதிப்ப
ஆதித்தன் தன்கதி ரால்அவை

சேட்டிப்பப்
பேதித்தப் பேதியா வாறுஅருட்
பேதமே. 39

2343
பேதம் அபேதம் பிறழ்பேதா
பேதமும்
போதம் புணர்போதம் போதமும்
நாதமும்
நாத முடன்நாக நாதாதி நாதமும்
ஆதன் அருளின் அருள்இச்சை
யாமே. 40

2344
மேவிய பொய்க்கரி யாட்டும்
வினையெனப்
பாவிய பூதம்கொண்டு ஆட்டிப்
படைப்பாதி

பூவியல் கூட்டத்தால் போதம்
புரிந்தருள்
ஆவியை நாட்டும் அரன்அரு ளாமே.
41

2345
ஆறாது அகன்று தனையறிந்
தானவன்
ஈறாகி யாவினும் இயலாவும்
தனில்எய்த
வேறாய் வெளிபுக்கு வீடுற்றான்
அம்மருள்
தேறாத் தெளிவுற்றுத் தீண்டச்
சிவமாமே. 42

2346
தீண்டற்குரிய அரிய திருவடி
நேயத்தை

மீண்டுற்று அருளால் விதிவழியே
சென்று
தூண்டிச் சிவஞான மாவினைத்
தானேறித்
தாண்டிச் சிவனுடன் சாரலும் ஆமே.
43

2347
சார்ந்தவர் சாரணர் சித்தர் சமாதியர்
சார்ந்தவர் மெய்ஞ்ஞான தத்துவ
சாத்தியர்
சார்ந்தவர் நேயந் தலைப்பட்ட
ஆனந்தர்
சார்ந்தவர் சத்த அருள்தன்மை யாரே.
44

2348
தான்என்று அவன்என்று

இரண்டென்பர் தத்துவம்
தான்என்று அவன்என்று இரண்டற்ற
தன்மையத்
தான்என்று இரண்டுஉன்னார்
கேவலத் தானவர்
தான்இன்றித் தானாகத் தத்துவ
சுத்தமே. 45

2349
தன்னினில் தன்னை அறியும்
தலைமகன்
தன்னினில் தன் ஐ அறியத்
தலைப்படும்
தன்னினில் தன்னைச் சார்கிலன்
ஆகில்
தன்னினில் தன்ஐயும் சார்தற்கு
அரியவே. 46

2350
அறியகி லேன்என்று அரற்றாதே
நீயும்
நெறிவழி யேசென்ற நேர்பட்ட
பின்னை
இருசுட ராகி இயற்றவல் லானும்
ஒருசுட ராவந்துஎன் உள்ளத்துள்
ஆமே. 47

2351
மண்ஒன்று தான்பல நற்கலன்
ஆயிடும்
உள்கின்ற யோனிகட்டு எல்லாம்
ஒருவனே
கண்ஒன்று தான்பல காணும்
தனைக்காணா
அண்ணலும் அவ்வண்ணம்
ஆகிநின்றானே. 48

2352

ஓம்புகின் றான்உலகு ஏழையும்
உள்நின்று
கூம்புகின் றார்குணத் தின்னொடும்
கூறுவர்
தேம்புகின்றார்சிவன் சிந்தைசெய்
யாதவர்
கூம்பகில் லார்வந்து கொள்ளலும்
ஆமே. 49

2353

குறிஅறி யார்கள் குறிகாண மாட்டார்
குறிஅறி யார்கடம் கூடல் பெரிது
குறிஅறி யாவகை கூடுமின் கூடி
அறிவறி யாஇருந்து அன்னமும்
ஆமே. 50

2354
ஊனோ உயிரோ உறுகின்றது
ஏதுஇன்பம்
வானோர் தலைவி மயக்கத்து
உறநிற்கத்
தானோ பெரிதுஅறி வோம் என்னும்
மானுடர்
தானே பிறப்போடு இறப்பறி யாரே.
51

## 14. அறிவுதயம்

2355
தன்னை அறியத் தனக்கொரு
கேடில்லை
தன்னை அறியாமல் தானே
கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை

அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந்
தானே. 1

2356
அங்கே அடற்பெரும் தேவரெல்
லாம்தொழச்
சிங்கா தனத்தே சிவன்இருந்
தானென்று
சங்குஆர் வளையும் சிலம்பும்
சரேலெனப்
பொங்குஆர் குழலியும் போற்றிஎன்
றாளே. 2

2357
அறிவு வடிவென்று அறியாத
என்னை
அறிவு வடிவென்று அருள்செய்தான்

நந்தி

அறிவு வடிவென்று அருளால்
உணர்ந்தே
அறிவு வடிவென்று அருந்திருந்
தானே. 3

2358
அறிவுக்கு அழிவில்aல ஆக்கமும்
இல்லை
அறிவுக்கு அறிவல்லது ஆதாரம்
இல்லை
அறிவே அறிவை அறிகின்றது
என்றிட்டு
அறைகின் றனமறை ஈறுகள் தாமே. 4

2359
ஆயு மலரின் அணிமலர் தன்மேலே

பாய இதழ்கள் பதினாறும் அங்குள
தூய அறிவு சிவானந்த மாகியே
போய அறிவாய்ப் புணர்ந்திருந்
தானே. 5

2360
மன்னிநின் றாரிடை வந்தருள்
மாயத்து
முன்னிநின் றாமை மொழிந்தேன்
முதல்வனும்
பொன்னின்வந் தானோர் புகழ்திரு
மேனியைப்
பின்னிநின் றேன்நீ பெரியையென்
றானே. 6

2361
அறிவுஅறி வாக அறிந்துஅன்பு
செய்மின்

அறிவுஅறி வாக அறியும்இவ் வண்ணம்
அறிவுஅறி வாக அணிமாதி சித்தி
அறிவுஅறி வாக அறிந்தணன் நந்தியே. 7

2362
அறிவுஅறி வென்று அங்கு அரற்றும் உலகம்
அறிவுஅறி யாமை யாரும் அறியார்
அறிவுஅறி யாமை கடந்துஅறி வானால்
அறிவுஅறி யாமை அழகிய வாறே. 8

2363
அறிவுஅறி யாமையை நீவி யவனே
பொறிவாய் ஒழிந்துஎங்கும் தானான போது

அறிவாய் அவற்றினுள் தானாய்
அறிவின்
செறிவாகி நின்றவன் சிவனும் ஆமே.
9

2364
அறிவுடை யார்நெஞ்சு அகலிடம்
ஆவது
அறிவுடை யார்நெஞ்ச அருந்தவம்
ஆவது
அறிவுடை யார்நெஞ்சொடு ஆதிப்
பிரானும்
அறிவுடை யார்நெஞ்சத்து அங்குநின்
றானே. 10

2365
மாயனும் ஆகி மலரோன்
இறையுமாய்க்

காயநன் னாட்டுக் கருமுதல்
ஆனவன்
சேயன் அணியன் தித்திக்கும்
தீங்கரும்
பாய்அமு தாகிநின்று அண்ணிக்கின்
றானே. 11

2366
என்னை அறிந்திலேன் இத்தனை
காலமும்
என்னை அறிந்தபின் ஏதும்
அறிந்திலேன்
என்னை அறிந்திட்டு இருத்தலும்
கைவிடாது
என்னையிட்டு என்னை உசாவுகின்
றானே. 12

2367

மாய விளக்கது நின்று மறைந்திடும்
தூய விளக்கது நின்று சுடர்விடும்
காய விளக்கது நின்று கனன்றிடும்
சேய விளக்கினைத் தேடுகின்
றேனை. 13

2368
தேடுகின் றேன்திசை எட்டோ டு
இரண்டையும்
நாடுகின் றேன்நல மேஉடை யானடி
பாடுகின் றேன்பர மேதுணை
யாமெனக்
கூடுகின் றேன்குறை யாமனைத்
தாலே. 14

2369
முன்னை முதல்விளை யாட்டத்து
முன்வந்தோர்

பின்னை பெருமலம் வந்தவர் பேர்த்திட்டுத்
தன்னைத் தெரிந்துதன் பண்டைத் தலைவன்தன்
மன்னிச் சிவமாக வாரா பிறப்பே. 15

## 15. ஆறு அந்தம்

2370
வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்
நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்
ஓதத் தகும்எட்டு யோகாந்த அந்தமும்
ஆதிக்க லாந்தமும் ஆறந்தம் ஆமே. 1

2371
அந்தம்ஓர் ஆறும் அறிவார்
அதிசுத்தர்
அந்தம்ஓர் ஆறும் அறிவார்
அமலத்தர்
அந்தம்ஓர் ஆறும் அறியார்
அவர்தமக்கு
அந்தமோடு ஆதி அறியஒண்
ணாதே. 2

2372
தானான வேதாந்தம் தான்என்னும்
சித்தாந்தம்
ஆனாத் துரியத்து அணுவன்
தனைக்கண்டு
தேனார் பராபரம் சேர்சிவ யோகமாய்
ஆனா மலமற்று அரும்சித்தி யாதலே.
3

2373
நித்தம் பரனோடு உயிருற்று
நீள்மனம்
சத்தம் முதல்ஐந்தும் தத்துவத்
தால்நீங்கச்
சுத்தம் அசுத்தம் தொடரா
வகைநினைந்து
அத்தன் பரன்பால் அடைதல்சித்
தாந்தமே. 4

2374
மேவும் பிரமனே விண்டு உருத்திரன்
மேவுசெய் ஈசன் சதாசிவன் மிக்கு
அப்பால்
மேவும் பரவிந்து நாதம் விடாஆறாறு
ஓவும் பொழுதுஅணு ஒன்றுஉள
தாமே. 5

2375
உள்ள உயிர்ஆறாற தாகும்
உபாதியைத்
தெள்ளி அகன்றுநா தாந்தத்தைச்
செற்றுமேல்
உள்ள இருள்நீங்க ஓர்1உணர்
வாகுமேல்
எள்ளலின் நாதாந்தத்து எய்திடும்
போதமே. 6

2376
தேடும் இயம நியமாதி சென்றகன்று
ஊடும் சமாதியில் உற்றுப் படர்சிவன்
பாடுறச் சீவன் பரமாகப் பற்றறக்
கூடும் உபசாந்தம் யோகாந்தக்
கொள்கையே. 7

2377
கொள்கையில் ஆன கலாந்தம்
குறிக்கொள்ளில்
விள்கையில் ஆன நிவிர்த்தாதி
மேதாதிக்கு
உள்ளன வாம்விந்து உள்ளே
ஒடுங்கலும்
தெள்ளி அதனைத் தெளிதலும்
ஆமே. 8

2378
தெளியும் இவையன்றித் தேர்ஐங்
கலைவேறு
ஒளியுள் அமைந்துள்ளது ஓரவல்
லார்கட்கு
அளியவ னாகிய மந்திரம் தந்திரம்
தெளிஉப தேசஞா னத்தொடுஐந்
தாமே. 9

2379
ஆகும் அனாதி கலைஆ கமவேதம்
ஆகும்அத் தந்திரம் அந்நூல்
வழிநிற்றல்
ஆகும் அனாதி உடல்அல்லா
மந்திரம்
ஆகும் சிவபோ தகம்உப தேசமே. 10

2380
தேசார் சிவமாகும் தன்ஞானத்
தின்கலை
ஆசார நேய மறையும் கலாந்தத்துப்
பேசா உரையுணர் வற்ற பெருந்தகை
வாசா மகோசர மாநந்தி தானே. 11

2381
தான்அவ னாகும் சமாதி தலைப்படில்

ஆன கலாந்தநா தாந்தயோ காந்தமும்
ஏனைய போதாந்தம் சித்தாந்த
மானது
ஞான மென்ஞேய ஞாதுரு வாகுமே.
12

2382
ஆறந்த மும்சென்று அடங்கும்அந்
நேயத்தே
ஆறந்த ஞேயம் அடங்கிடும் ஞாதுரு
கூறிய ஞானக் குறியுடன் வீடவே
தேறிய மோனம் சிவானந்த மாமே.
13

2383
உண்மைக் கலைஆறுஓர் ஐந்தான்
அடங்கிடும்
உண்மைக் கலாந்தம்

இரண்டுஐந்தோடு ஏழ்அந்தம்
உண்மைக் கலைஒன்றில் ஈறாய
நாதாந்தத்து
உண்மைக் கலைசொல்ல ஓர்அந்தம்
ஆமே. 14

2384
ஆவுடை யானை அரன்வந்து
கொண்டபின்
தேவுடை யான்எங்கள் சீர்நந்தி
தாள்தந்து
வீவற வேதாந்த சித்தாந்த
மேன்மையைக்
கூளி யருளிய கோனைக் கருதுமே.
15

2385
கருதும் அவர்தம் கருத்தினுக்கு ஒப்ப

அரனுரை செய்தருள் ஆகமந்
தன்னில்
வருசமயப் புற மாயைமா மாயை
உருவிய வேதாந்த சித்தாந்த
உண்மையே. 16

2386
வேதாந்தம் சித்தாந்தம் வேறிலா
முத்திரை
போதாந்த ஞானம் யோகாந்தம்
பொதுஞேய
நாதாந்தம் ஆனந்தம் சீரோ தயமாகும்
மூதாந்த முத்திரை மோனத்து
மூழ்கவே. 17

2387
வேதாந்தம் தன்னில் உபாதிமே
வேல்விட

நாதாந்த பாசம் விடுநல்ல தொம்பதம்
மீதாந்த காரணோ பாதியேழ்
மெய்ப்பரன்
போதாந்த தற்பதம் போமசி
என்பவே. 18

2388
அண்டங்கள் ஏழும் கடந்துஅகன்று
அப்பாலும்
உண்டென்ற பேரொளிக் குள்ளாம்
உளஒளி
பண்டுறு நின்ற பராசக்தி என்னவே
கொண்டவன் அன்றிநின் றான்தங்கள்
கோவே. 19

2389
கோஉணர்ந் தும்சத்தி யாலே
குறிவைத்துத்

தேவுணர்த் துங்கரு மஞ்செய்தி
செய்யவே
பாவனைத் தும்படைத் தர்ச்சனை
பாரிப்ப
ஓஅனைத் துண்டுஒழி யாத
ஒருவனே. 20

2390
ஒருவனை உன்னார் உயிர்தனை
உன்னார்
இருவினை உன்னார் இருமாயை
உன்னார்
ஒருவனு மேயுள் உணர்ந்திநின்
றூட்டி
அருவனு மாகிய ஆதரத் தானே. 21

2391
அரன்அன்பர் தானம தாகிச் சிவத்து

வருமவை சத்திகள் முன்னா
வகுத்திட்டு
உரனுறு சந்நிதி சேட்டிப்ப என்றும்
திரனுறு தோயாச் சிவாநந்தி யாமே.
22

2392
வேதாந்த தொம்பதம் மேவும்
பசுஎன்ப
நாதாந்த பாசம் விடநின்ற நன்பதி
போதாந்த தற்பதம் போய்இரண்டு
ஐக்கியம்
சாதா ரணம்சிவ சாயுச் சிய மாமே. 23

2393
சிவமாதல் வேதாந்த சித்தாந்த மாகும்
அவம்அவம் ஆகும் அவ்வவ்
இரண்டும்

சிவமாம் சதாசிவன் செய்துஒன்றான்
ஆனால்
நவமான வேதாந்தம் ஞானசித்
தாந்தமே. 24

2394
சித்தாந்த தேசீவன் முத்திசித்
தித்திலால்
சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித்
தித்திவர்
சித்தாந்த வேதாந்தம் செம்பொருள்
ஆதலால்
சிந்தாந்த வேதாந்தம் காட்டும்
சிவனையே. 25

2395
சிவனைப் பரமனுள் சீவனுள்
காட்டும்

அவமற்ற வேதாந்த சித்தாந்தம்
ஆனால்
நவமுற்று அவத்தையில் ஞானம்
சிவமாம்
தவமிக்கு உணர்ந்தவர் தத்துவத்
தாரே. 26

2396
தத்துவம் ஆகும் சகள அகளங்கள்
தத்துவ மாம்விந்து நாதம் சதாசிவம்
தத்துவ மாகும் சீவன் தன் தற்பரம்
தத்துவ மாம்சிவ சாயுச் சியமே. 27

2397
வேதமோடு ஆகமம் மெய்யாம்
இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும்என்று
உள்ளன

நாதன் உரையவை நாடில்
இரண்டந்தம்
பேதமது என்பர் பெரியோர்க்கு
அபேதமே. 28

2398
பராநந்தி மன்னும் சிவானந்தம்
எல்லாம்
பரானந்தம் மேல்மூன்றும் பாழுறா
ஆனந்தம்
விராமுத்தி ரானந்தம் மெய்நடன
ஆனந்தம்
பொராநின்ற உள்ளமே பூரிப்பி
யாமே. 29

2399
ஆகுங் கலாந்தம் இரண்டந்த
நாதாந்தம்

ஆகும் பொழுதிற் கலைஐந்தாம்
ஆதலில்
ஆகும் அரனேபஞ் சாந்தகன் ஆம்
என்ற
ஆகும் மறைஆ கமம்மொழிந்
தான்அன்றே. 30

2400
அன்றாகும் என்னாதுஐ வகைஅந்தம்
அன்னை
ஒன்றான வேதாந்த சித்தாந்தம்
உள்ளிட்டு
நின்றால் யோகாந்தம் நேர்படும்
நேர்பட்டால்
மன்றாடி பாதம் மருவலும் ஆமே. 31

2401
அனாதி சீவன்ஐம் மலமற்றுஅப்

பாலாய்
அனாதி அடக்கித் தனைக்கண்டு
அரனாய்த்
தன்ஆதி மலம்கெடத் தத்துவா தீதம்
வினாவுநீர் பாலாதல் வேதாந்த
உண்மையே. 32

2402
உயிரைப் பரனை உயிர்சிவன்
தன்னை
அயர்வற்று அறிதொந் தத்தசி
அதனால்
செயலற்று அறிவாகி யும்சென்று
அடங்கி
அயர்வற்ற வேதாந்த சித்தாந்தம்
ஆமே. 33

2403

மன்னிய சோகமாம் மாமறை
யாளர்தம்
சென்னிய தான சிவயோகமாம்
ஈதென்ன
அன்னது சித்தாந்த மாமறை
யாய்பொருள்
துன்னிய ஆகம நூலெனத்
தோன்றுமே. 34

2404
முதலாகும் வேத முழுதுஆ
கமம்அகப்
பதியான ஈசன் பகர்ந்தது இரண்டு
முதிதான வேதம் முறைமுறை
யால்அமர்ந்து
அதிகாதி வேதாந்த சித்தாந்தம்
ஆகவே. 35

## 16. பதி பசு பாசம் வேறின்மை

2405

அறிவுஅறிவு என்ற அறிவும் அனாதி
அறிவுக்கு அறிவாம் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி
அறிவு பதியில் பிறப்பறுந் தானே. 1

2406

பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசம்மூன்
றுண்டு
பசுத்தன்மை நீக்கிஅப் பாசம்
அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி
விடாவே. 2

2407

கிடக்கின்ற வாறே கிளர்பயன் மூன்று
நடக்கின்ற ஞானத்தை நாடோ றும்
நோக்கித்
தொடக்குஒன்றும் இன்றித்
தொழுமின் தொழுதால்
குடக்குன்றில் இட்ட விளக்கது
வாமே. 3

2408
பாசம்செய் தானைப் படர்சடை
நந்தியை
நேசம்செய்து ஆங்கே நினைப்பர்
நினைத்தாலும்
கூசம் செய்து உன்னிக்
குறிக்கொள்வது எவ்வண்ணம்
வாசம்செய் பாசத்துள் வைக்கின்ற
வாறே. 4

2409
விட்ட விடம்ஏறா வாறுபோல்
வேறாகி
விட்ட பசுபாசம் மெய்கண்டோ ன்
மேவுறான்
சுட்டிய கேவலம் காணும் சகலத்தைச்
சுட்டு நனவில் அதீதத்துள்
தோன்றுமே. 5

2410
நாடும் பதியுடன் நற்பசு பாசமும்
நீடுமாம் நித்தன் நிலையறி
வார்இல்லை
நீடிய நித்தம் பசுபாச நீக்கமும்
நாடிய சைவர்க்கு நந்தி அளித்ததே. 6

2411
ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்

ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகுநற் பாசமாம்
ஆய அரனிலை ஆய்ந்துகொள்
வார்கட்கே. 7

2412
பதிபசு பாசம் பயில்வியா நித்தம்
பதிபசு பாசம் பகர்வோர்க்கு
ஆறாக்கிப்
பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும்
பதிபசு பாசம் பயில நிலாவே. 8

2413
பதியும் பசுவொடு பாசமும் மேலைக்
கதியும் பசுபாச நீக்கமும் காட்டி
மதிதந்த ஆனந்த மாநந்தி காணும்
துதிதந்து வைத்தனன் சத்தசை
வத்திலே. 9

2414
அறிந்தணு மூன்றுமே யாங்கணும்
ஆகும்
அறிந்தணு மூன்றுமெ யாங்கணும்
ஆக
அறிந்த அனாதி வியாத்தனும் ஆவன்
அறிந்த பதிபடைப் பான்அங்கு
அவற்றையே. 10

2415
படைப்புஆதி யாவது பரம்சிவம்
சத்தி
இடைப்பால உயிர்கட்கு
அடைத்துஇவை தூங்கல்
படைப்பாதி சூக்கத்தைத் தற்பரன்
செய்ய
படைப்பாதி தூய மலம்அப்

பரத்திலே. 11

2416
ஆகிய சூக்கத்தை அவ்விந்து
நாதமும்
ஆகிய சத்தி சிவபர மேம்ஐந்தால்
ஆகிய சூக்கத்தில் ஐங்கரு
மம்செய்வோன்
ஆகிய தூயஈ சானனும் ஆமே. 12

2417
மேவும் பரசிவம் மேற்சத்தி நாதமும்
மேவும் பரவிந்து ஐம்முகன்
வேறுஈசன்
மேவும் உருத்திரன் மால்வேதா
மேதினி
ஆகும் படிபடைப் போன்அர னாமே.
13

2418
படைப்பும் அளிப்பும் பயில்இளைப்
பாற்றும்
துடைப்பும் மறைப்பும்முன் தோன்ற
அருளும்
சடத்தை விடுத்த அருளும் சகலத்து
அடைத்த அனாதியை ஐந்தென
லாமே. 14

2419
ஆறாறு குண்டலி தன்னின்
அகத்திட்டு
வேறாகு மாயை1ில் முப்பால்
மிகுத்திட்டுஅங்கு
ஈறாம் கருவி இவற்றால் வகுத்திட்டு
வேறாம் பதிபசு பாசம்வீ டாகுமே. 15

2420
வீட்கும் பதிபசு பாசமும் மீதுற
ஆட்கும் இருவினை ஆங்குஅவற்
றால் உணர்ந்து
ஆட்கு நரசு சுவர்க்கத்தில் தானிட்டு
நாட்குற நான்தங்கு நற்பாசம்
நண்ணுமே. 16

2421
நண்ணிய பாசத்தில் நான்எனல்
ஆணவம்
பண்ணிய மாயையில் ஊட்டல்
பரிந்தனன்
கண்ணிய சேதனன் கண்வந்த
பேரருள்
அண்ணல் அடிசேர் உபாயமது
ஆகுமே. 17

2422
ஆகும் உபாயமே யன்றி அழுக்கற்று
மோசு மறச்சுத்தன் ஆதற்கு மூலமே
ஆகும் அறுவை அழுக்கேற்றி
ஏற்றல்போல்
ஆகுவ தெல்லாம் அருட்பாச
மாகுமே. 18

2423
பாசம் பயிலுயிர் தானே பரமுதல்
பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப
பாசம் பயிலப் பதிபர மாதலால்
பாசம் பயிலப் பதிபசு வாகுமே. 19

2424
அத்தத்தில் உத்தரம் கேட்ட
அருந்தவர்
அத்தத்தில் உத்தர மாகும்

அருள்மேனி
அத்தத்தி னாலே அணையப் பிடித்தலும்
அத்தத்தில் தம்மை அடைந்து நின்றாரே. 20

17. அடிதலை அறியும் திறங்கூறல்

2425
காலும் தலையும் அறியார் கலதிகள்
கால்அந்தச் சத்தி அருள்என்பர் காரணம்
பாலொன்று ஞானமே பண்பார் தலைஉயிர்
கால்அந்த ஞானத்கைக் காட்டவீ டாகுமே. 1

2426

தலைஅடி யாவது அறியார்
காயத்தில்
தலைஅடி உச்சியில் உள்ளது மூலம்
தலைஅடி யான அறிவை அறிந்தோர்
தலைஅடி யாகவே தான்இருந் தாரே.
2

2427
நின்றான் நிலமுழுது அண்டமும்
மேலுற
வன்தாள் அசுரர் அமரரும்
உய்ந்திடப்
பின்தான் உலகம் படைத்தவன்
பேர்நந்தி
தன்தாள் இணைஎன் தலைமிசை
ஆனதே. 3

2428

சிந்தையின் உள்ளே எந்தை திருவடி
சிந்தையின் எந்தை திருவடிக் கீழது
எந்தையும் என்னை அறியகி
லான்ஆகில்
எந்தையை யானும் அறியகி லேனே.
4

2429
பன்னாத பாரொளிக்கு அப்புறத்து
அப்பால்
என்நா யாகனார் இசைந்தங்கு
இருந்திடம்
உன்னா ஒளியும் உரைசெய்யா
மந்திரம்
சொன்னான்கழலினை சூடிநின்
றேனே. 5

2430

பதியது தோற்றும் பதமது வைம்மின்
மதியது செய்து மலர்ப்பதம் ஓதும்
நதிபொதி யும்சடை நாரியோர் பாகன்
கதிசெயும் காலங்கள் கண்டுகொ
ளீரே. 6

2431
தரித்துநின்றானடி தன்னிட நெஞ்சில்
தரித்து நின்றான் அமராபதி நாதன்
கரித்துநின் றான்கரு தாதவர் சிந்தை
பரித்துநின் றான்அப் பரிபாகத்
தானே. 7

2432
ஒன்றுண்டு தாமரை ஒண்மலர்
மூன்றுள
தன்தாதை தாளும் இரண்டுள
காயத்துள்

நன்றாகக் காய்ச்சிப் பதஞ்செய
வல்லார்கட்கு
இன்றேசென்று ஈசனை எய்தலும்
ஆமே. 8

2433
கால்கொண்டுஎன் சென்னியிற்
கட்டறக் கட்டற
மால்கொண்ட நெஞ்சின் மயக்கிற்
றுயக்கறப்
பால்கொண்ட என்னைப்
பரன்கொள்ள நாடினான்
மேல்கொண்டென் செம்மை விளம்ப
ஒண்ணாதே. 9

2434
பெற்ற புதல்வர்போல் பேணிய
நாற்றமும்

குற்றமுங் கண்டு குணங்குறை
செய்யவோர்
பற்றைய ஈசன் உயிரது பான்மைக்குச்
செற்றமி லாச் செய்கைக்கு எய்தின
செய்யுமே. 10

## 18. முக்குற்றம்

2435
மூன்றுள குற்றம் முழுதும் நலிவன
மான்றுஇருள் தூங்கி மயங்கிக்
கிடந்தன
மூன்றினை நீங்கினர் நீக்கினர்
நீங்காதார்
மூன்றினுள் பட்டு முடிகின்ற வாறே.
1

2436

காமம் வெகுளி மயக்கம்
இவைகடிந்து
ஏமம் பிடித்திருந் தேனுக்கு எறிமணி
ஓமெனும் ஓசையின் உள்ளே
உறைவதோர்
தாமம் அதனைத் தலைப்பட்ட
வாறே. 2

## 19. முப்பதம்

2437
தோன்றிய தொம்பதம் தற்பதம்
சூழ்தர
ஏன்ற அசிபதம் இம்மூன்றோடு
எய்தனோன்
ஆகின்ற பராபர மாகும் பிறப்பற
ஏன்றனன் மாளச் சிவமாய்
இருக்குமே. 1

2438
போதந் தனையுன்னிப் பூதாதி
பேதமும்
ஓதுங் கருவிதொண் ணூறுடன் ஓராறு
பேதமும் நாதாந்தப் பெற்றியில்
கைவிட்டு
வேதம்சொல் தொம்பத மாகுதல்
மெய்ம்மையே. 2

2439
தற்பதம் என்றும் துவம்பதம்
தான்என்றும்
நிற்பது அசியத்துள் நேரிழை
யாள்பதம்
சொற்பதத் தாலும் தொடரஒண்
ணாச்சிவன்
கற்பனை யின்றிக் கலந்துநின் றானே.

3

2440
அணுவும் பரமும் அசிபதத்து ஏய்ந்த
கணுஒன் றிலாத சிவமும் கலந்தால்
இணையறு பால்தேன் அமுதென
இன்பத்
துணையது வாயுரை யற்றிடத்
தோன்றுமே. 4

2441
தொம்பதம் தற்பதம் தோன்றும்
அசிபதம்
நம்பிய சீவன் பரன்சிவ னாய்நிற்கும்
அம்பத மேலைச் சொரூபமா
வாக்கியம்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி
தானே. 5

2442
ஐம்பது அறியா தவரும் அவர்சிலர்
உம்பனை நாடி உரைமுப்ப
தத்திடைச்
செம்பர மாகிய வாசி செலுத்திடத்
தம்பரயோகமாய்த் தான்அவன்
ஆகுமே. 6

2443
நந்தி அறிவும் நழுவில் அதீதமாம்
இந்தியும் சத்தாதி விடவிய னாகும்
நந்திய மூன்றுஇரண்டு ஒன்று
நலம்ஐந்து
நந்தி நனவாதி மூட்டும் அனாதியே.
7

2444

பரதுரி யத்து நனவு படியுண்ட
விரிவிற் கனவும் இதன்உப சாந்தத்து
துரிய கழுமுனையும் ஒவும்
சிவன்பால்
அரிய துரியம் அசிபதம் ஆமே. 8

## 20. முப்பரம்

2445
தோன்றிஎன் உள்ளே சுழன்றுஎழு
கின்றதோர்
மூன்று படிமண் டலத்து முதல்வனை
ஏன்றெய்தி இன்புற்று இருந்தே
இளங்கொடி
நான்று நலம்செய் நலந்தரு மாறே. 1

2446
மன்று நிறைந்தது மாபர மாயது

நின்று நிறைந்தது நேர்தரு நந்தியும்
கன்று நினைந்தெழு தாயென
வந்தபின்
குன்று நிறைந்த குணவிளக்கு ஆமே.
2

2447
ஆறாறு தத்துவத்து அப்புறத்து
அப்புரம்
கூறா உபதேசம் கூறில் சிவபரம்
வேறாய் வெளிப்பட்ட வேதப்
பசுவனார்
பேறாக ஆனந்தம் பேறும் பெருகவே.
3

2448
பற்றறப் பற்றில் பரம்பதி யாவது
பற்றறப் பற்றில் பரனறி வேபரம்

பற்றறப் பற்றினில் பற்றவல்
லோர்கட்கே
பற்றறப் பற்றில் பரம்பர மாமே. 4

2449
பரம்பர மான பதிபாசம் பற்றாப்
பரம்பர மாகும் பரஞ்சிவ மேவப்
பரம்பர மான பரசிவா னந்தம்
பரம்பர மாகப் படைப்பது அறிவே. 5

2450
நனவில் கலாதியாம் நாலொன்று
அகன்று
தனியுற்ற கேவலம் தன்னில் தானாகி
நினைவுற்று அகன்ற அதீதத்துள்
நேயந்
தனையுற்று இடத்தானே தற்பர
மாமே. 6

2451
தற்கண்ட தூயமும் தன்னில்
விசாலமும்
பிற்காணும் தூடணம் தானும்
பிறழ்வுற்றுத்
தற்பரன் கால பரமும் கலந்தற்ற
நற்பரா தீதமும் நாடுஅக ராதியே. 7

## 21. பரலட்சணம்

2452
அதீதத்து ளாகி அகன்றவன் நந்தி
அதீதத்து ளாகி அறிவிலோன்
ஆன்மா
மதிபெற் றிருள்விட்ட மன்னுயிர்
ஒன்றாம்
பதியிற் பதியும் பரவுயிர் தானே. 1

2453
ஆதியும் அந்தமும் இல்லா அரும்பதி
சோதிப் பரஞ்சுடர் தோன்றத்தோன்
றாமையின்
நீதிய தாய்நிற்கும் நீடிய அப்பர
போதம் உணர்ந்தவர் புண்ணியத்
தோரே. 2

2454
துரியங் கடங்கு துரியா தீதத்தே
அரிய வியோகங்கொண்டு அம்பலத்
தாடும்
பெரிய பிரானைப் பிரணவக்
கூபத்தே
துரியவல் லார்க்குத் துரிசில்லை
தானே. 3

2455

செம்மைமுன் னிற்பச் சுவேதம்
திரிவபோல்
அம்மெய்ப் பரத்தோடு அணுவன்உள்
ளாயிடப்
பொய்மைச் சகமுண்ட போத
வெறும்பாழில்
செம்மைச் சிவமேரு சேர்கொடி
யாகுமே. 4

2456

வைச்ச கலாதி வருதத்து வங்கெட
வெச்ச இருமாயை வேறாக
வேரறுத்து
உச்ச பரசிவ மாம்உண்மை ஒன்றவே
அச்சம் அறுத்தென்னை ஆண்டவன்
நந்தியே. 5

2457
என்னை அறிய இசைவித்த என்நந்தி
என்னை அறிந்து அறி யாத
இடத்துய்த்துப்
பின்னை ஒளியிற் சொரூபம்
புறப்பட்டுத்
தன்னை அளித்தான் தற்பர மாகவே.
6

2458
பரந்தும் சுருங்கியும் பார்புனல் வாயு
நிரந்தர வளியொடு ஞாயிறு திங்கள்
அரந்த அறநெறி யாயது வாகித்
தரந்த விசும்பொன்று தாங்கிநின்
றானே. 7

2459
சத்தின் நிலையினில் தானான

சத்தியும்
தற்பரை யாய்நிற்கும் தானாம் பரற்கு
உடல்
உய்த்தரும் இச்சையில் ஞானாதி
பேதமாய்
நித்தம் நடத்தும் நடிக்கும்மா
நேயத்தே. 8

2460
மேலொடு கீழ்பக்கம் மெய்வாய்கண்
நாசிகள்
பாலிய விந்து பரையுள் பரையாகக்
கோலிய நான்சுவை ஞானம் கொணர்
விந்து
சீலமி லாஅணுச் செய்திய தாமே. 9

2461
வேறாம் அதன்தன்மை போலும்இக்

காயத்தில்
ஆறாம் உபாதி அனைத்தாகும்
தத்துவம்
பேறாம் பரவொளி தூண்டும்
பிரகாசமாய்
ஊறாய் உயிர்த்துண்டு உறங்கிடும்
மாயையே. 10

2462
தற்பரம் மன்னும் தனிமுதல்
பேரொளி
சிற்பரம் தானே செகமுண்ணும்
போதமும்
தொற்பதம் தீர்பாழில் சுந்தரச்
சோதிபுக்கு
அப்புறம் மற்றதுஇங்கு ஒப்பில்லை
தானே. 11

2463
பண்டை மறைகள் பரவான்
உடலென்னும்
துண்ட மதியோன் துரியாதீ
தந்தன்னைக்
கண்டு பரனும்அக் காரணோ
பாதிக்கே
மிண்டின் அவன்சுத்தம் ஆகான்
வினவிலே. 12

2464
வெளிகால் கனல்அப்பு மேவுமண்
நின்ற
தனியா இயதற் பரங்காண்
அவன்தான்
வெளிகால் கனல்அப்பு மேவுமண்
நின்ற
வெளியாய சத்தி அவன்வடி வாமே.

13

2465
மேருவி னோடே விரிகதிர் மண்டலம்
ஆர நினையும் அருந்தவ யோகிக்குச்
சீரார் தவம்செய்யில் சிவனருள்
தானாகும்
பேரவும் வேண்டாம் பிறிதில்லை
தானே. 14

## 22. முத்திரியம்

2466
நனவாதி மூன்றினில் சீவ துரியம்
தனதுஆதி மூன்றினில் பரதுரி
யந்தான்
நனவாதி மூன்றி னில்சிவ துரியமாம்
இனதாகும் தொந்தத் தசிபதத் தூடே.

2467
தானாம் நனவில் துரியம்தன்
தொம்பதம்
தானாம் துரியம் நனவாதி
தான்மூன்றில்
ஆனாப் பரபதம் அற்றது அருநனா
வானான மேல்மூன்றில் துரியம்
அணுகுமே. 2

2468
அணுவின் துரியத்து நான்கும
துஆகிப்
பணியும் பரதுரி யம்பயில் நான்கும்
தணிவில் பரமாகிச் சாரமுந் துரியக்
கணுவில் இந் நான்கும் கலந்தார்

ஐந்தே. 3

2469
ஈர்ஐந்து அவத்தை இசைமுத்
துரியத்துள்
நேர்அந்த மாகநெறிவழி யேசென்று
பார்அந்த மான பராபத்து
அயிக்கியத்து
ஓர்அந்த மாம்இரு பாதியைச்
சேர்த்திடே. 4

2470
தொட்டே இருமின் துரிய நிலத்தினை
எட்டாது எனின்நின்று எட்டும்
இறைவனைப்
பட்டாங்கு அறிந்திடில் பன்னா
உதடுகள்
தட்டாது ஒழிவதோர் தத்துவந் தானே.

5

2471
அறிவாய் அசத்தென்னும் ஆறாறு
அகன்று
செறிவாய மாயை சிதைத்துஅரு
ளாலே
பிறியாத பேரருள் ஆயிடும் பெற்றி
நெறியான அன்பர் நிலையறிந் தாரே.
6

2472
நனவின் நனவாகி நாலாம் துரியம்
தனதுயிர் தெம்பதம் ஆமாறு போல
வினையறு சீவன் நனவாதி யாகத்
தனைய பரதுரி யந்தற் பதமே. 7

2473

தொம்பதம் தற்பதம் சொன்முத்
துரியம்பொல்
நம்பிய மூன்றாம் துரியத்து நல்நாமம்
அம்புலி யுன்னா அதிசூக்கம்
அப்பாலைச்
செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி
தானே. 8

## 23. மும்முத்தி

2474
சீவன்தன் முத்தி அதீதம் பரமுத்தி
ஓய்உப சாந்தம் சிவமுத்தி ஆனந்தம்
Yமூவயின் முச்சொரூப முத்திமுப்
பாலதாய்
ஓவுறு தாரத்தில் உள்ளும்நா
தாந்தமே. 1

2475
ஆவது அறியார் உயிர்பிறப் பாலுறும்
ஆவது அறியும் உயிர்அருட்
பாலுறும்
ஆவது ஒன்றில்லை அகம்புறத்
தென்றுஅகன்று
ஓவு சிவனுடன் ஒன்றாதல் முத்தியே.
2

2476
சிவமாகி மும்மலம் முக்குணம்
செற்றுத்
தவமான மும்முத்தி தத்துவத்து
அயிக்கியத்
துவம்ஆ கியநெறி சோகம்என்
போர்க்குச்
சிவமாம் அமலன் சிறந்தனன் தானே.
3

2477
சித்தியும் முத்தியும் திண்சிவ மாகிய
சுத்தியும் முத்தீ தொலைக்கும்
சுகானந்த
சத்தியும் மேலைச் சமாதியும்
ஆயிடும்
பெத்தம் அறுத்த பெரும்பெரு
மானே. 4

## 24. முச்சொரூபம்

2478
ஏறிய வாறே மலம்ஐந்
திடைஅடைந்து
ஆறிய ஞானச் சிவோகம்
அடைந்திட்டு
வேறும் எனமுச் சொரூபத்து வீடுற்று

அங்கு
ஈறதில் பண்டைப் பரன்உண்மை
செய்யுமே. 1

2479
மூன்றுள மாளிகை மூவர் இருப்பிடம்
மூன்றினில் முப்பத் தாறும் உதிப்புள
மூன்றினின் உள்ளே முளைத்தெழும்
சோதியைக்
காண்டலும் காயக் கணக்கற்ற வாறே.
2

2480
உலகம் புடைபெயர்ந்து ஊழியம்
போன
நிலவு சுடரொளி மூன்றும் ஒன்றாய
பலவும் பரிசொடு பான்மையுள் ஈசன்
அளவும் பெருமையும் ஆரறி வாரே.

3

2481
பெருவாய் முதலெண்ணும் பேதமே
பேதித்து
அருவாய் உருவாய் அருவுரு வாகிக்
குருவாய் வரும்சத்தி கோன்உயிர்ப்
பன்மை
உருவாய் உடனிருந்து ஒன்றாய்அன்
றாமே. 4

2482
மணிஒளி சோபை இலக்கணம்
வாய்த்து
மணிஎன வாய்நின்ற வாறுஅது
போலத்
தணிமுச் சொருபாதி சத்தியாதி சாரப்
பணிவித்த பேர்நந்தி பாதம்பற்றாயே.

5

2483
கல்லொளி மாநிறம் சோபை
கதிர்தட்ட
நல்ல மணியொன்றின் நாடிஒண்
முப்பதும்
சொல்லறும் முப்பாழில் சொல்லறு
பேருரைத்து
அல்அறும் முத்திராந் தத்துஅனு
பூதியே. 6

2484
உடந்தசெந் தாமரை உள்ளுறு சோதி
நடந்தசெந் தாமரை நாதம் தகைந்தால்
அடைந்த பயோதரி அட்டி
அடைத்தஅவ்
விடம்தரு வாசலை மேல்திற வீரே. 7

## 25. முக்கரணம்

2485
இடனொரு மூன்றில் இயைந்த
ஒருவன்
கடன் உறும் அவ்வுரு
வேறெனக்காணும்
திடமது போலச் சிவபர சீவர்
உடனுரை பேதமும் ஒன்றென
லாமே. 1

2486
ஒளியைஒளிசெய்து ஓம்என்று
எழுப்பி
வளியை வளிசெய்து வாய்த்திட
வாங்கி
வெளியை வெளிசெய்து மேலெழ

வைத்துத்
தெளியத் தெளியும் சிவபதம் தானே.
2

2487
முக்கர ணங்களின் மூர்ச்சைதீர்த்து
ஆவதுஅக்
கைக்கா ரணம் என்னத் தந்தனன்
காண்நந்தி
மிக்க மனோன்மணி வேறே
தனித்துஏக
ஒக்குமது உன்மணி ஓதுஉள்
சமாதியே. 3

## 26. முச்சூனிய தொந்தத்தசி

2488
தற்பதம் தொம்பதம் தானாம்

அசிபதம்
தொல்பதம் மூன்றும் துரியத்துத்
தோற்றலே
நிற்பது உயிர்பரன் நிகழ்சிவ
மும்மூன்றின்
சொற்பத மாகும் தொந்தத் தசியே. 1

2489
தொந்தத் தசிமூன்றில் தொல்கா
மியமாதி
தொந்தத் தசிமூன்றில் தொல்கா
மதமாதி
வந்த மலம்குணம் மாளச்
சிவம்தோன்றின்
இந்துவின் முன்இருள் ஏகுதல்
ஒக்குமே. 2

2490

தொந்தத் தசியைஅவ் வாசியில்
தோற்றியே
அந்த முறைஈர் ஐந்தாக மதித்திட்டு
அந்தம் இல்லாத அவத்தைஅவ்
வாக்கியத்து
உந்து முறையில் சிவன்முன்வைத்து
ஓதிடே. 3

2491
வைத்துச் சிவத்தை மதிசொரு
பானந்தத்து
உய்த்துப் பிரணவ மாம்உப தேசத்தை
மெய்த்த இதயத்து விட்டிடு
மெய்யுணர்ந்து
அத்தற்கு அடிமை அடைந்துநின்
றானே. 4

2492

தொம்பதம் மாயையுள் தோன்றிடும்
தற்பதம்
அம்புரை தன்னில் உதிக்கும்
அசிபதம்
நம்புறு சாந்தியில் நண்ணும்அவ்
வாக்கியம்
உம்பர் உரைதொந்தத் தசிவாசி
யாமே. 5

2493
ஆகிய அச்சோயம் தேவதத்
தன்இடத்து
ஆகிய வைவிட்டால் காயம்
உபாதானம்
ஏகிய தொந்தத் தசியென்ப
மெய்யறிவு
ஆகிய சீவன் பரசிவன் ஆமே. 6

2494
தாமதம் காமியம் ஆசித் தகுணம்
மாமலம் மூன்றும் அகார
உகாரத்தோடு
ஆம்அறும் மவ்வும் அவ் வாய்உடல்
மூன்றில்
தாமாம் துரியமும் தொந்தத் தசியதே.
7

## 27. முப்பாழ்

2495
காரியம் ஏழ்கண் டறும்மாயப்
பாழ்விடக்
காரணம் ஏழ்கண் டறும்போதப்
பாழ்விடக்
காரிய காரண வாதனை கண்டறும்
சீர்உப சாந்தமுப் பாழ்விடத் தீருமே.

1

2496
மாயப்பாழ் சீவன் வியோமப்பாழ்
மன்பரன்
சேயமுப் பாழெனச் சிவசத்தி யில்
சீவன்
ஆய வியாப்தம் எனும்முப்பா
ழாம்அந்தத்
தூய சொரூபத்தில் சொல்முடி
வாகுமே. 2

2497
எதிர்அற நாளும் எருதுஉவந்து ஏறும்
பதியெனும் நந்தி பதமது கூடக்
கதியெனப் பாழை கடந்து அந்தக்
கற்பனை
உதறிய பாழில் ஒடுங்குகின் றேனே.

3

2498
துரியம் அடங்கிய சொல்லறும்
பாழை
அரிய பரம்பரம் என்பர்கள் ஆதர்
அரிய பரம்பரம் என்றே துதிக்கும்
அருநிலம் என்பதை யார்அறி வாரே.
4

2499
ஆறாறு நீங்க நமவாதி அகன்றிட்டு
வேறா கயபரை யாவென்று
மெய்ப்பரன்
ஈறான வாசியில் கூட்டும்
அதுவன்றோ
தேறாச் சிவாய நமவெனத் தேறிலே.
5

2500
உள்ளம் உருவென்றும் உருவம் உளமென்றும்
உள்ள பரிசறித் தோரும் அவர்கட்குப்
பள்ளமும் இல்லைத் திடர்இல்லை பாழ்இல்லை
உள்ளமும் இல்லை உருவில்லை தானே. 6

## 28. காரிய காரண உபாதி

2501
செற்றிடும் சீவ உபாதித் திறன்ஏழும்
பற்றும் பரோபதி ஏழும் பகருரை
உற்றிடும் காரிய காரணத் தோடற
அற்றிட அச்சிவ மாகும் அணுவனே. 1

2502
ஆறாறு காரியோ பாதி அகன்றிட்டு
வேறாய் நனவு மிகுந்த கனாநனா
ஆறாறு அகன்ற கழுத்தி அதில்
எய்தாப்
பேறா நிலத்துயிர் தொம்பதம்
பேசிலே. 2

2503
அகாரம் உயிரே உகாரம் பரமே
மகாரம் சிவமாய் வருமுப் பதத்துச்
சிகாரம் சிவமே வகாரம் பரமே
யகாரம் உயிரென்று அறையலும்
ஆமே. 3

2504
உயிர்க்குயி ராகி ஒழிவற்று அழிவற்று

அயிர்ப்புஅறும் காரணோ பாதி
விதிரேகத்து
உயிர்ப்புறும் ஈசன் உபமிதத்
தால்அன்றி
வியர்ப்புறும் ஆணவம் வீடல்செய்
யாவே. 4

2505
காரியம் ஏழில் கலக்கும் கடும்பசு
காரணம் ஏழில் கலக்கும் பரசிவன்
காரிய காரணம் கற்பனை சொற்பதப்
பாரறும் பாழில் பராபரத் தானே. 5

## 29. உபசாந்தம்

2506
முத்திக்கு வித்து முதல்வன்தன்
ஞானமே

பத்திக்கு வித்துப் பணிந்துற்றப்
பற்றலே
சித்திக்கு வித்துச் சிவபரம் தானாதல்
சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே. 1

2507
காரியம் ஏழும் கரந்திடும் மாயையுள்
காரணம் ஏழும் கரக்கும் கடுவெளி
காரிய காரண வாதனைப் பற்றறப்
பாரண வும் உப சாந்தப் பரிசிதே. 2

2508
அன்ன துரியமே ஆத்தும சுத்தியும்
முன்னிய சாக்கிரா தீதத் துறுபுரி
மன்னும் பரங்காட்சி யாவது
உடனுற்றுத்
தன்னின் வியாத்தி தனில்உப
சாந்தமே. 3

2509
ஆறாதுஅமைந்துஆண வத்தையுள்
நீக்குதல்
பேறான தன்னை அறிதல் பின்
தீர்சுத்தி
கூறாத சாக்கிரா தீதம் குருபரன்
பேறாம் வியாத்தம் பிறழ்உப
சாந்தமே. 4

2510
வாய்ந்த உபசாந்த வாதனை உள்ளப்
போய்
ஏய்ந்த சிவமாத லின்சிவா னந்தத்துத்
தோய்ந்தறல் மோனச் சுகானுபவத்
தோடே
ஆய்ந்துஅதில் தீர்க்கை யானதுஈர்
ஐந்துமே. 5

2511

பரையின் பரவ பரத்துடன் ஏகமாய்த்
திரையின்நின்று ஆகிய தெண்புனல்
போலவுற்று
உரையுணர்ந்து ஆரமுது ஒக்க
உணர்ந்துளோன்
கரைகண் டானுரை அற்ற கணக்கிலே.
6

## 30. புறங்கூறாமை

2512

பிறையுள் கிடந்த முயலை எறிவான்
அறைமணி வாள்கொண் டவர்தமைப்
போலக்
கறைமணி கண்டனக் காண்குற
மாட்டார்

நிறையறி வோம்என்பர் நெஞ்சிலர்
தாமே. 1

2513
கருந்தாள் கருடன் விசும்பூடு
இறப்பக்
கருந்தாள் கயத்தில் கரும்பாம்பு நீங்க
பெருந்தன்மை பேசுதி நீஒழி நெஞ்சே
அருந்தர அலைகடல் ஆறசென்
றாலே. 2

2514
கருதலர் மாளக் கருவாயில் நின்ற
பொருதலைச் செய்வது புல்லறி
வாண்மை
மருவலர் செய்கின்ற மாதவம்
ஒத்தால்
தருவலர் கேட்ட தனியும்ப ராமே. 3

2515
பிணங்கவும் வேண்டாம் பெருநில
முற்றும்
இணங்கிஎம் ஈசனே ஈசன்என்று
உன்னில்
கணம்பதி னெட்டும் கழலடி காண
வணங்கெழு நாடி அங்கு அன்புற
லாமே. 4

2516
என்னிலும் என்னுயி ராய
இறைவனைப்
பொன்னிலும் மாமணி யாய
புனிதனை
மின்னிய எவ்வுய ராய விகிர் தனை
உன்னிலும் உன்னும் உறும்வகை
யாலே. 5

2517
நின்றும் இருந்தும் கிடந்தும்
நிமலனை
ஒன்றும் பொருள்கள் உரைப்பல
ராகிலும்
வென்றுஐம் புலனும் விரைந்து
பிணக்கறுவந்து
ஒன்றாய் உணரும் ஒருவனும் ஆமே.
6

2518
நுண்ணறி வாய்உல காய்உலகு
ஏழுக்கும்
எண்ணறி வாய்நின்ற எந்தை
பிரான்தன்னைப்
பண்அறி வாளனைப் பாவித்த
மாந்தரை

விண்அறி வாளர் விரும்புகின் றாரே.
7

2519
விண்ணவ ராலும் அறிவுஅறி
யான்தன்னைக்
கண்ணற வுள்ளே கருதிடின்
காலையில்
எண்உற வாசமுப் போதும் இயற்றிநீ
பண்ணிடில் தன்மை பராபர னாமே.
8

2520
ஒன்றாய் உலகுடன் ஏழும் பரந்தவன்
பின்தான் அருள்செய்த பேரருள்
ஆளவன்
கன்றா மனத்தார்தம் கல்வியுள்
நல்லவன்

பொன்றாத போது புனைபுக ழானே.
9

2521
போற்றியென் றேன்எந்தை
பொன்னான சேவடி
ஏற்றியே தென்றும் எறிமணி
தான்அகக்
காற்றின் விளக்கது காயம் மயக்குறும்
அற்றலும் கேட்டது மன்றுகண்
டேனே. 10

2522
நேடிக்கொண் டென்னுள்ளே நேர்தரு
நந்தியை
ஊடுபுக் காரும் உணர்ந்தறி
வாரில்லை
கூடுபுக் கேறலுற் றேனவன்

கோலங்கண்
மூடிக்கண் டேனுல கேழுங்க்ண்
டேனே. 11

2523
ஆன புகழும் அமைந்த தோர்
ஞானமுந்
தேனு மிருக்குஞ் சிறுவரை
யொன்றுடண்
டூனமொன் றின்றி யுணர்வுசெய்
வார்கட்கு
வானகஞ் செய்யு மறவனு மாமே. 12

2524
மாமதி யாமதி யாய்நின்ற மாதவர்
தூய்மதி யாகுஞ் சுடர்பர மானந்தந்
தாமதி யாகச் சகமுணச் சாந்திபுக்
காமல மற்றார் அமைவுபெற் றாரே.

13

2525

பதமுத்தி மூன்றும் பழுதென்று
கைவிட்
டிதமுற்ற பாச இருளைத் துரந்து
மதமற் றெனதியான் மாற்றிவிட்
டாங்கே
திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே.
14

2526

சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்
சுத்தாசுத் தத்துடன் தோய்ந்துந்தோ
யாதவர்
முத்தரம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்
சத்தர் சதாசிவத் தன்மையர் தாமே.
15

## 31. எட்டிதழ்க் கமல முக்குண அவத்தை

2527
உதிக்கின்ற இந்திரன் அங்கி யமனும்
துதிக்கும் நிருதி வருணன்நல் வாயு
மதிக்கும் குபேரன் வடதிசை யீசன்
நிதித்தெண் டிசையு நிறைந்துநின்
றாரே. 16

2528
ஒருங்கிய பூவுமோர் எட்டித ழாகும்
மருங்கிய மாயா புரியத னுள்ளே
சுருங்கிய தண்டின் சுழுனையி னூடே
ஒருங்கிய சோதியை ஓர்ந்தெழும்
உய்ந்தே. 17

2529
மொட்டலர் தாமரை மூன்றுள
மூன்றினும்
விட்டலர் கின்றனன் சோதி விரிசுடர்
எட்டல ருள்ளே இரண்டலர்
உள்ளுறிற்
பட்டலர் கின்றதோர் பண்டங்
கனாவே. 18

2530
ஆறே யருவி யகங்குளம் ஒன்றுண்டு
நூறே சிவகதி நுண்ணிது வண்ணமும்
கூறே குவிமுலைக் கொண்பனை
யாளொடும்
வேறே யிருக்கும் விழுபொருள்
தானே. 19

2531

திகையெட்டும் தேரேட்டும் தேவதை எட்டும்
வகையெட்டு மாய்நின்ற ஆதிப் பிரானை
வகையெட்டு நான்குமற் றாங்கே நிறைந்து
முகையெட்டும் உள்நின் றுதிக்கின்ற வாறே. 20

2532

ஏழுஞ் சகளம் இயம்பு கடந்தெட்டில்
வாழும் பரமென் றதுகடந் தொன்பதில்
ஊழி பராபரம் ஓங்கிய பத்தினில்
தாழ்வது வான தனித்தன்மை தானே. 21

2533

பல்லூழி பண்பன் பகலோன்
இறையவன்
நல்லூழி ஐந்தினுள் ளேநின்ற
ஊழிகள்
செல்லூழி அண்டத்துக் சென்றவவ்
ஊழியுள்
அவ்வூழி யுச்சியு ள்ஒன்றிற் பகவனே
22

2534
புரியும் உலகினிற் பூண்டவெட்
டானை
திரியுங் களிற்றொடு தேவர் குழாமும்
எரியு மழையும் இயங்கும் வெளியும்
பரியுமா காசத்திற் பற்றது தானே. 23

2535
ஊறு மருவி யுயர்வரை யுச்சிமேல்

ஆறின்றிப் பாயும் அருங்குளம்
ஒன்றுண்டு
சேறின்றிப் பூத்த செழுங்கொடித்
தாமரைப்
பூவின்றிச் சூடான் புரிசடை யோனே.
24

2536
ஒன்றும் இரண்டும் ஒருங்கிய
காலத்து
நின்றும் இருந்தும் நிலம்பல
பேசினும்
வென்று மிருந்து விகிர்தனை நாடுவர்
சென்றும் இருந்தும் திருவடை
யோரே. 25

32. ஒன்பான் அவத்தை - ஒன்பான்
அபிமானி

2537
தொற்பத விசுவன் றைசதன் பிராஞ்ஞன்
நற்பத விராட்டன்பொன் கர்ப்பனவ் யாகிர்தன்
பிற்பதஞ் சொலிதையன் பிரசா பத்தியன்
பொற்புவி சாந்தன் பொருதபி மானியே. 26

2538
நவமாம் அவத்தை நன்வாதி பற்றிற்
பவமா மலங்குணம் பற்றற்றுப் பற்றாத்
தவமான சத்திய ஞானப் பொதுவிற்
றுவமார் துரியஞ் சொருபம தாமே. 27

2539
சிவமான சிந்தையிற் சீவன் சிதைய
பவமான மும்மலம் பாறிப் பறிய
நவமான அந்தத்தின் நற்சிவ போதந்
தவமான மவையாகித் தானல்ல
வாகுமே. 28

2540
முன்சொன்ன வொன்பானின்
முன்னுறு தத்துவந்
தன்சொல்லில்
எண்ணத்தகாவொன்பான் வேறுள
பின்சொல்ல லாகுமிவ் வீரொன்பான்
பேர்த்திட்டுத்
தன்செயத வாண்டவன் றான்சிறந்
தானே. 29

2541

உகந்த ஒன்பதும் ஐந்தும் உலகம்
பகர்ந்த பிரானென்னும் பண்பினை
நாடி
அகந்தெம் பிரானென்பன் அல்லும்
பகலும்
இகந்தன வல்வினை யோடறுத்
தானே. 30

2542

நலம்பல காலந் தொகுத்தன நீளங்
குலம்பல வண்ணங் குறிப்பொடுங்
கூடும்
பலம்பல பன்னிரு கால நினையும்
நிலம்பல வாறின் நீர்மையன் றானே.
31

2543

ஆதி பராபர மாகும் பராபரை
சோதி பரமுயிர் சொல்லுநற் றத்துவம்
ஓதுங் கமைமாயே யோரிரண் டோ
ரமுத்தி
நீதியாம் பேதமொன் பானுடன்
ஆதியே. 32

2544
தேராத சிந்தை தெளியத் தெளிவித்து
வேறாத நரக சுவர்க்கமும் மேதினி
ஆறாப் பிறப்பும் உயிர்க்கரு
ளால்வைத்தான்
வேறாத் தெளியார் வினையுயிர்
பெற்றதே. 33

2545
ஒன்பான் அவத்தையுள் ஒன்பான்
அபிமானி

நன்பாற் பயிலு நவதத் துவமாதி
ஒன்பானில் நிற்பதோர் முத்துரி
யத்துறச்
செம்பாற் சிவமாதல் சித்தாந்த
சித்தியே. 34

## 33. சுத்தாஅசுத்தம்

2546
நாசி நுனியினின் நான்குமூ
விரலிடை
ஈசன் இருப்பிடம் யாரும் அறிகிலர்
பேசி யிருக்கும் பெருமறை யம்மறை
கூசி யிருக்குங் குணமது வாமே. 35

2547
கருமங்கள் ஒன்று கருதுங் கருமத்
துரிமையுங் கன்மமும் முன்னும்

பிறவிப்
கருவினை யாவது கண்டகன்
றன்பின்
புரிவன கன்மக் கயத்துட் புகுமே. 36

2548
மாயை மறைக்க மறைந்த
மறைப்பொருள்
மாயை மறைய வெளிப்படும்
அப்பொருள்
மாயை மறைய மறையவல்
லார்கட்குக்
காயமும் இல்லை கருத்தில்லை
தானே. 37

2549
மோழை யடைந்து முழைதிறந்
துள்புக்குக்

கோழை யடைகின்ற தண்ணற்
குறிப்பினில்
ஆழ அடைந்தங் கனலிற்
புறஞ்செய்து
தாழ அடைப்பது தன்வலி யாமே. 38

2550
காயக் குழப்பனைக் காயநன்
னாடனைக்
காயத்தி னுள்ளே கமழ்கின்ற
நந்தியைத்
தேயத்து ளேயெங்குந் தேடித்
திரிவர்கள்
காயத்துள் நின்ற கருத்தறி யாரே. 39

2551
ஆசூசம் ஆசூசம் என்பார் அறிவிலார்
ஆசூச மாமிடம் ஆரும் அறிகிலார்

ஆசூச மாமிடம் ஆரும் அறிந்தபின்
ஆசூச மானிடம் ஆசூச மாமே. 40

2552
ஆசூச மில்லை அருநிய மத்தருக்கு
ஆசூச மில்லை அரனை அர்ச்
சிப்பவர்க்கு
ஆசூச மில்லையாம் அங்கி
வளர்ப்போர்க்கு
ஆசூச மில்லை அருமறை
ஞானிக்கே. 41

2553
வழிபட்டு நின்று வணங்கு மவர்கருச்
சுழிபட்டு நின்றதோர் தூய்மை
தொடங்கும்
குழிபட்டு நின்றவர் கூடார் குறிகள்
கழிபட் டவர்க்கன்றிக் காணவொண்

ணாதே. 42

2554
தூய்மணி தூயனல் தூய ஒளிவிடும்
தூய்மணி தூயனல் தூரறி வாரில்லை
தூய்மணி தூயனல் தூரறி வார்கட்குத்
தூய்மணி தூயனல் தூயவு மாமே. 43

2555
தூயது வாளா வைத்தது தூநெறி
தூயது வாளா நாதன் திருநாமம்
தூயது வாளா அட்டமா சித்தியும்
தூயது வாளா தூயடிச் சொல்லே. 44

2556
பொருளது வாய்நின்ற புண்ணியன் எந்தை
அருளது போற்றும் அடியவ ரன்றிச்

சுருளது வாய்நின்ற துன்பச் சுழியின்
மருளது வாச்சிந்தை மயங்குகின்
றாரே. 45.

2557
வினையா மசத்து விளைவ துணரார்
வினைஞானந் தன்னில் வீடலுந்
தேரார்
வினைவிட வீடென்னும் வேதமும்
ஓதார்
வினையாளார் மிக்க விளைவறி
யாரே. 46

34. முத்திநிந்தை.

2558
பரகதி யுண்டென இல்லையென்
போர்கள்

நரகதி செல்வது ஞாலம் அறியும்
இரகதி செய்திடு வார்கடை தோறும்
துரகதி யுண்ணத் தொடங்குவர்
தாமே. 1.

## 2559

கூடகில் லார்குரு வைத்த குறிகண்டு
நாடகில் லார்நயம் பேசித் திரிவர்கள்
பாடகில் லாரவன் செய்த பரிசறிந்
தாடவல் லாரவர் பேறெது வாமே. 2.

## 2560

புறப்பட்டுப் போகும் புகுதுமென்
னெஞ்சில்
திறப்பட்ட சிந்தையைத் தெய்வமென்
றெண்ணி
அறப்பட்ட மற்றப் பதியென்
றழைத்தேன்

இறப்பற்றி னேன்இங்
கிதென்னென்கின் றானே 3.

2561
திடரடை நில்லாத நீர்போல் ஆங்கே
உடலிடை நில்லா உறுபொருள்
காட்டிக்
கடலிடை நில்லா கலஞ்சேரு
மாபோல்
அடலிடை வண்ணனும் அங்குநின்
றானே. 4.

2562
தாமரை நூல்போல் தடுப்பார்
பரந்தொடும்
போம்வழி வேண்டிப் புறமே
யுழிதர்வர்
காண்வழி காட்டக்கண் காணாக்

கலதிகள்
தீநெறி செல்வான் திரிகின்ற வாறே.
5.

2563
மூடுதல் இன்றி முடியும் மனிதர்கள்
கூடுவர் நந்தி யவனைக் குறித்துடன்
காடும் மலையுங் கழனி கடந்தோறும்
ஊடும் உருவினை யுன்னிகி லாரே.
6.

2564
ஆவது தெற்கும் வடக்கும் அமரர்கள்
போவார் குடக்கும் குணக்கும்
குறுவழி
நாவினின் மந்திர மென்று நடுவங்கி
வேவது செய்து விளங்கிடு வீரே. 7.

2565
மயக்குற நோக்கினும் மாதவஞ்
செய்யார்
தமக்குறப் பேசின தாரணை
கொள்ளார்
சினக்குறப் பேசின தீவினை யாளர்
தமக்குற வல்லினை தாங்கிநின்
றாரே. 8.

## 35. இலக்கணாத் திரயம்

2566
விட்ட விலக்கணைதான்போம்
வியோமத்துத்
தொட்டு விடாத துபசாந்தத்
தேதொகும்
விட்டு விடாதது மேவுஞ்சத் தாதியிற்
சுட்டு மிலக்கணா தீதஞ் சொருபமே.

9.

2567
வில்லின்
விசைநாணிற்கோத்திலக்கெய்தபின்
கொல்லுங் களிறைந்துங் கோலொடு
சாய்ந்தன
வில்லு ளிருந்தெறி கூரும் ஒருவற்குக்
கல்கலன் என்னக் கதிரெதி யாமே.
10.

36. தத்துவமசி வாக்கியம்.

2568
சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனார்
தாவு பரதுரி யத்தனில் தற்பதம்
மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பத
மோவி விடும் தத் துவமசி

உண்மையே. 1.

2569
ஆறா றகன்ற அணுத்தொம்
பதஞ்சுத்தம்
ஈறான தற்பதம் எய்துப சாந்தத்துப்
பேறா கியசீவன் நீங்கிப்பிர சாதத்து
வீறான தொந்தத் தசிதத்வ மசியே. 2.

2570
ஆகிய வச்சோயம் தேவகத்
தன்னிடத்து
ஆகிய விட்டு விடாத
விலக்கணைத்து
ஆருப சாந்தமே தொந்தத் தசியென்ப
ஆகிய சீவன் பரன்சிவ னாமே. 3.

2571

துவந்தத் தசியே தொந்தத் தசியும்
அவைமன்னா வந்து வயத்தேகமான
தவமுறு தத்துவ மசிவே தாந்த
சிவமா மதுஞ்சித் தாந்தவே தாந்தமே.
4.

2572
துரியம் அடங்கிய சொல்லறும்
பாழை
அரிய பரமென்ப ராகாரி
தன்றென்னார்
உரிய பரம்பர மாமொன் றுதிக்கும்
அருநிலம் என்பதை யாரறி வாரே. 5.

2573
தொம்பதந் தற்பதஞ் சொல்லும்
அசிபதம்
நம்பிய முத்துரி யத்துமே னாடவே

யும்பத மும்பத மாகும் உயிர்பரன்
செம்பொரு ளான சிவமென லாமே.
6.

2574
வைத்த துரிய மதிற்சொரு பானந்தத்
துய்த்த பிரணவ மாமுப தேசத்தை
மெய்த்த விதயத்து விட்டிடு
மெய்யுணர்
வைத்த படியே யடைந்து நின்றானே.
7.

2575
நனவாதி ஐந்தையும் நாதாதியில்
வைத்துப்
பினமா மலத்தைப் பின்வைத்துப்
பின்சுத்தத்
தனதாஞ் சிவகதி சத்தாதி சாந்தி

மனவா சகங்கெட்ட மன்னனை
நாடே. 8.

2576
பூரணி யாது புறம்பொன்றி
லாமையின்
பேரணி யாதது பேச்சொன்றி
லாமையின்
ஓரணை யாததுவொன்றுமி
லாமையிற்
காரண மின்றியே காட்டுந்
தகைமைத்தே. 9.

2577
நீயது வானா யெனநின்ற பேருரை
ஆயது நானானேன் என்னச்
சமைந்தறச்
சேய சிவமாக்குஞ் சீர்நந்தி பேரருள்

ஆயது வாயனந் தானந்தி யாகுமே. 10.

2578
உயிர்பர மாக உயர்பர சீவன்
அரிய சிவமாக அச்சிவ வேதத்து
இரியிலுஞ் சீராம் பராபரன் என்ன
உரிய உரையற்ற வோமய மாமே. 11.

2579
வாய்நாசி யேபுரு மத்தகம் உச்சியில்
ஆய்நாசி யுச்சி முதலவை
யாய்நிற்கும்
தாய்நாடி யாதிவாக் காதி சகலாதி
சேய்நா டொளியெனச் சிவகதி
யைந்துமே. 12.

2580

அறிவறி யாமை இரண்டும் அகற்றிப்
செறிவறி வாய்எங்கும் நின்ற
சிவனைப்
பிறிவறி யாது பிரானென்று பேணுங்
குறியறி யாதவர் கொள்ளறி யாரே.
13.

2581

அறிவார் அறிவன அப்பும் அனலும்
அறிவார் அறிவன அப்புங் கலப்பும்
அறிவான் இருந்தங் கறிவிக்கி
னல்லால்
அறிவான் அறிந்த அறிவறி யோமே.
14.

2582

அதீதத்துள் ளாகி அகன்றவன் நந்தி

அதீதத்துள் ளாகி அறிவிலோன்
ஆன்மா
மதிபெற் றுருள்விட்ட மன்னுயி
ரொன்றாம்
பதியிற் பதியும் பரவுயிர் தானே. 15.

2583
அடிதொழ முன்னின் றமரர்க ளத்தன்
முடிதொழ ஈசனும் முன்னின் றருளிப்
படிதொழ நீபண்டு பாவித்த
தெல்லாங்
கடிதொழ காணன்னுங் கண்ணுத
லானே. 16.

2584
நின்மல மேனி நிமலன் பிறப்பிலி
என்னுளம் வந்திவன் என்னடி
யானென்று

பொன்வளர் மேனி புகழ்கின்ற
வானவன்
நின்மல மாகென்று நீக்கவல் லானே.
17.

2585
துறந்துபுக் கொள்ளொளி சோதியைக்
கண்டு
பறந்ததென் உள்ளம் பணிந்து
கிடந்தே
மறந்தறி யாவென்னை வான்வர்
கோனும்
இறந்து பிறவாமல் ஈங்குவைத்
தானே. 18.

2586
மெய்வாய் கண்மூக்குச்
செவியென்னும் மெய்த் தோற்றத்

தவ்வாய அந்தக் கரணம் அகில்மும்
எவ்வா யியுரும் இறையாட்ட
ஆடலாற்
கைவா யிலாநிறை எங்குமெய்
கண்டதே. 19.

37. விசுவக் கிராசம்.

2587
அழிகின்ற சாயா புருடனைப் போலக்
கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்
எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை
யொக்கப்
பொழிகின்ற இவ்வுடற் போமப்
பரத்தே. 1.

2588
உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிற்

படருஞ் சிவசத்தி தாமே பரமாம்
உடலைவிட் டிந்த உயிரெங்கு மாகிக்
கடையுந் தலையுங் கரக்குஞ்
சிவத்தே. 2.

2589
செவிமெய்வாய் கண்மூக்குச் சேரிந்
திரியம்
அவியின் றியமன மாதிகள் ஐந்துங்
குவிவொன் றிலாமல் விரிந்து
குவிந்து
தவிர்வொன் றிலாத சராசரந் தானே.
3.

2590
பரனெங்கு மாரப் பரந்துற்று நிற்கும்
திரனெங்கு மாகிச் செறிவெங்கு
மெய்தும்

உரனெங்கு மாயுல குண்டு
உமிழ்க்கும்
வரமிங்஛ன் கண்டியான் வாழ்ந்துற்ற
வாறே. 4.

2591
அளந்து துரியத் தறிவினை வாங்கி
உளங்கொள் பரஞ்சகம் உண்ட
தொழித்துக்
கிளர்ந்த பரஞ்சிவஞ்சேரக்
கிடைத்தால்
விளங்கிய வெட்ட வெளியனு
மாமே. 5.

2592
இரும்பிடை நீரென என்னையுள்
வாங்கிப்
பரம்பர மான பரமது விட்டே

உரம்பெற முப்பாழ் ஒளியை
விழுங்கி
இருந்தஎன் நந்தி இதயத்து ளானே. 6.

2593

கரியுண் விளவின் கனிபோல்
உயிரும்
உரிய பரமுமுன் னோதுஞ் சிவமும்
அரிய துரியமேல் அகிலமும்
எல்லாம்
திரிய விழுங்குஞ் சிவபெரு மானே.
7.

2594

அந்தமும் ஆதியும் ஆகும் பராபரன்
தந்தம் பரம்பரன் தன்னிற் பரமுடன்
நந்தமை யுண்டுமெய்ஞ் ஞானநே
யாந்தத்தே

நந்தி யிருந்தனன் நாமறி யோமே. 8.

## 38. வாய்மை

2595
அற்ற துரைக்கில் அருளுப தேசங்கள்
குற்ற மறுத்தபொன் போலுங்
கனலிடை
அற்றற வைத்திறை மாற்றற
ஆற்றிடில்
செற்றம் அறுத்த செழுஞ்சுட ராகுமே.
1.

2596
எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு
எல்லாம் அறிந்தும் இலாபமங்
கில்லை
எல்லாம் அறிந்த அறிவினை

நானென்னில்
எல்லாம் அறிந்த இறையென லாமே.
2.

2597
தலைநின்ற தாழ்வரை மீது
தவஞ்செய்து
முலைநின்ற மாதறி மூர்த்தியை
யானும்
புலைநின்ற பொல்லாப் பிறவி கடந்து
கலைநின்ற கள்வனை கண்டுகொண்
டேனே. 3.

2598
தானே யுலகில் தலைவ னெனத்தகும்
தானே யுலகுக்கோர் தத்துவ
மாய்நிற்கும்
வானே மழைபொழி மாமறை

கூர்ந்திடும்
ஊனே யுருகிய வுள்ளமொன் றாமே.
4.

2599
அருள்பெற்ற காரணம் என்கொல்
அமரில்
இருளற்ற சிந்தை இறைவனை நாடி
மருளுற்ற சிந்தையை மாற்றி
அருமைப்
பொருளுற்ற சேவடி போற்றுவோர்
தாமே. 5.

2600
மெய்கலந் தாரொடு மெய்கலந்
தான்தன்னை
பொய்கலந் தார்முன் புகுதா
ஒருவனை

உய்கலந் தூழித் தலைவனுமாய்
நிற்கும்
மெய்கலந் தின்பம் விளைந்திடும்
மெய்யர்க்கே. 6.

2601
மெய்கலந் தாரொடு மெய்கலந்
தான்மிகப்
பொய்கலந் தாருட் புகுதாப்
புனிதனை
கைகலந் தாவி எழும்பொழு
தண்ணலைக்
கைகலந் தார்க்கே கருத்துற லாமே. 7.

2602
எய்திய காலத் திருபொழு துஞ்சிவன்
மெய்செயின் மேலை விதியது
வாய்நிற்கும்

பொய்யும் புலனும் புகலொன்று
நீத்திடில்
ஐயனும் அவ்வழி யாகிநின் றானே.
8.

2603
எய்துவ தெய்தா தொழிவ திதுவருள்
உய்ய அருள்செய்தான் உத்தமன்
சீர்நந்தி
பொய்செய்புலன்
நெறியொன்பதுந்தாட்கொளின்
மெய்யென் புரவியை மேற்கொள்ள
லாமே. 9.

2604
கைகலந் தானை கருத்தினுள்
நந்தியை
மெய்கலந் தான்தன்னை வேத

முதல்வனைப்
பொய்கலந் தார்முன் புகுதாப் புனிதனைப்
பொய்யொழிந் தார்க்கே புகலிட மாமே 10.

2605
மெய்த்தாள் அகம்படி மேவிய நந்தியைக்
கைத்தாள் கொண்டாருந் திறந்தறி வாரில்லை
பொய்த்தாள் இடும்பையைப்
பொய்யற நீவிட்டாம்
கத்தாள் திறக்கில் அரும் பேற தாமே. 11.

2606
உய்யும் வகையால் உணர்வில்

ஏத்துமின்
மெய்யன் அரனெறி மேலுண்டு
திண்ணெனப்
பொய்யொன்று மின்றிப் புறம்பொலி
வார்நடு
ஐயனும் அங்கே அமர்ந்துநின்
றானே. 12.

2607
வம்பு பழுத்த மலர்ப்பழம் ஒன்றுண்டு
தம்பாற் பறவை புகுந்துணத்
தானொட்டா
தம்புகொண் டெய்திட் டகலத்
துரத்திடிற்
செம்பொற் சிவகதி சென்றெய்த
லாமே. 13

2608

மயக்கிய ஐம்புலப் பாசம் அறுத்துத்
துயக்கறுத்தானைத்
தொடர்மின்தொடர்ந்தால்
தியக்கஞ் செய்யாதே சிவனெம்
பெருமான்
உயப்போ எனமனம் ஒன்றுவித்
தானே. 14

2609
மனமது தானே நினையவல்
லாருக்குக்
கினமெனக் கூறு மிருங்காய மேவற்
றனிவினி னாதன்பால் தக்கன
செய்யில்
புனிதன் செயலாகும் போதப்
புவிக்கே. 15

## 39. ஞானி செயல்

2610
முன்னை வினைவரின் முன்னுண்டே
நீங்குவர்
பின்னை வினைக்கணார் பேர்ந்தறப்
பார்ப்பர்கள்
தன்னை யறிந்திடுந் தததுவ
ஞானிகள்
நன்மையில் ஐம்புலன் நாடலி னாலே.
1.

2611
தன்னை யறிந்திடும் தத்துவ
ஞானிகள்
முன்னை வினையின் முடிச்சை
யவிழ்பவர்கள்
பின்னை வினையைப் பிடித்து
பிசைவர்கள்

சென்னியின் வைத்த சிவனரு ளாலே. 2.

2612
மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா
மனவாக்கு கெட்டவர் வாதனை தன்னால்
தனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே. 3

## 40. அவா அறுத்தல்

2613
வாசியு மூசியும் பேசி வகையினால்
பேசி இருந்து பிதற்றிப் பயனில்லை

ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்
ஈசன் இருந்த இடம் எளிதாமே. 1.

2614
மாடத்து ளானலன் மண்டபத் தானலன்
கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்
வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்நெஞ்சில்
மூடத்து ளேநின்று முத்திதந் தானே. 2.

2615
ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை

யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந்
துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே. 3.

2616

அடுவன பூதங்கள் ஐந்தும் உடனே
படுவழி செய்கின்ற பற்றற வீசி
விடுவது வேட்கையை மெய்ந்நின்ற
ஞானம்
தொடுவது தம்மைத் தொடர்தலு
மாமே. 4.

2617

உவாக்கடல் ஒக்கின்ற வூழியும்
போன
துவாக்கட லுட்பட்டுத் துஞ்சினர்
வானோர்

அவாக்கட லுட்பட் டழுந்தினர் மண்ணோர்
தவாக்கடல் ஈசன் தரித்து நின்றானே. 5.

2618
நின்ற வினையும் பிணியும் நெடுஞ்செயல்
துந்தொழி லற்றுச் சுத்தம தாகலும்
பின்றைங் கருமமும் பேர்த்தருள் நேர்பெற்றுத்
துன்ற அழுத்தலும் ஞானிகள் தூய்மையே. 6.

2619
உண்மை யுணர்ந்துற ஒண்சித்தி முத்தியாம்
பெண்மயற் கெட்டறப் பேறட்ட

சித்தியாம்
திண்மையின் ஞானி சிவகாயம் கைவிட்டால்
வண்மை யருள்தான் அடைந்தபின் ஆறுமே. 7.

2620
அவனிவன் ஈசனென் றன்புற நாடிச்
சிவனிவன் ஈசனென் றுண்மையை யோரார்
பவனிவன் பல்வகை யாமிப் பிறவி
புவனிவன் போவது பொய்கண்ட போதே. 8.

2621
கொதிக்கின்ற வாறுங் குளிர்கின்ற வாறும்
பதிக்கின்ற வாறிந்தப் பாரக முற்றும்

விதிக்கின்ற ஐவரை வேண்டா துலகம்
நொதிக்கின்ற காயத்து நூலொன்று
மாமே. 9.

2622
உய்ந்தனம் என்பீர் உறுபொருள்
காண்கிலீர்
கந்த மலரிற் கலக்கின்ற நந்தியைச்
சிந்தையில் வைத்துத் தெளிவுறச்
சேர்த்திட்டால்
முந்தைப் பிறவிக்கு மூலவித் தாமே.
10.

## 41. பக்தியுடைமை

2623
முத்திசெய் ஞானமும் கேள்வியு
மாய்நிற்கும்

அத்தனை மாயா அமரர்
பிரான்தனைச்
சுத்தனை தூய்நெறி யாய்நின்ற
சோதியைப்
பத்தர் பரசும் பசுபதி தானென்றே. 1.

2624
அடியார் அடியார் அடியார்க்
கடிமைக்
கடியவனாய் நல்கிட் டடினையும்
பூண்டேன்
அடியார் அருளால் அவனடி கூட
அடியா னிவனென் றடிமைகொண்
டானே. 2.

2625
நீரிற் குளிரும் நெருப்பினிற் சுட்டிடும்
ஆரிக் கடனந்தி யாமா ரறிபவர்

பாரிற் பயனாரைப் பார்க்கிலும் நேரியர்
ஊரில் உமாபதி யாகிநின் றானே. 3.

2626
ஒத்துல கேழும் அறியா ஒருவனென்
றத்தன் இருந்திடம்
ஆரறிவார்சொல்லப்
பத்தர்தம் பத்தியிற் பாற்படில் அல்லது
முத்தினை யார்சொல்ல முந்துநின் றாரே. 4.

2627
ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்
நான்கன்றாய் நாடி யழைத்தேனென் நாதனை
வான்கன்றுக் கப்பாலாய் நின்ற

மறைப்பொருள்
ஊன்கன்றா னாடிவந் துள்புகுந்
தானே. 5.

2628
பெத்தத்துந் தன்பணி இல்லை
பிறத்தலான்
முத்தத்துந் தன்பணி இல்லை
முறைமையால்
அத்தற் கிரண்டும் அருளால்
அளித்தலாற்
பத்திப்பட் டோ ர்க்குப்
பணியொன்றும் இல்லையே. 6.

2629
பறவையிற் கற்பமும் பாம்புமெய்
யாகக்
குறவஞ் சிலம்பக் குளிர்வரை யேறி

நறவார் மலர்கொண்டு நந்தியை
யல்லால்
இறைவனென் றென்மனம் ஏத்தகி
லாவே. 7.

2630
உறுதுணை நந்தியை உம்பர் பிரானை
பெறுதுணை செய்து பிறப்பறுத்
துய்மின்
செறிதுணை செய்து சிவனடி சிந்தித்
துறுதுணை யாயங்கி யாகிநின்
றானே. 7.

2631
வானவர் தம்மை வலிசெய்
திருக்கின்ற
தானவர் முப்புரஞ் செற்ற
தலைவனைக்

கானவன் என்றுங் கருவரை
யானென்றும்
ஊனத னுள்நினைந் தொன்றுபட்
டாரே. 8.

2632
நிலைபெறு கேடென்று முன்னே
படைத்த
தலைவனை நாடித் தயங்குமென்
உள்ளம்
மலையுளும் வானகத் துள்ளும்
புறத்தும்
உலையுளும் உள்ளத்து மூழ்கிநின்
றேனே. 9.

## 42. முத்தியுடைமை

2633

முத்தியில் அத்தன் முழுத்த
அருள்பெற்றுத்
தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி
மெய்த்தவஞ் செய்கை வினைவிட்ட
மெய்யுண்மைப்
பத்தியி லுற்றோர் பரானந்த போதரே.
1.

2634

வளங்கனி தேடிய வன்றாட் பறவை
உளங்கனி தேடி யுழிதரும் போது
களங்கனி யங்கியிற் கைவிளக் கேற்றி
நலங் கொண்ட நால்வரும்
நாடுகின்றாரே. 2

43. சோதனை

2635

பெம்மான் பெருநந்தி பேச்சற்ற
பேரின்பத்து
அம்மா நடிதந் தருட்கடல் ஆடினோம்
எம்மாய மும்விடுத் தெம்மைக்
கரந்திட்டுச்
சும்மா திருந்திடஞ் சோதனை
யாகுமே. 1.

2636
அறிவுடை யானரு மாமறை யுள்ளே
செறிவுடை யான்மிகு தேவர்க்குந்
தேவன்
பொறியுடை யான்புலன் ஐந்துங்
கடந்த
குறியுடை யானொடுங் கூடுவன்
நானே. 2.

2637

அறிவறி வென்றங் கரற்றும் உலகம்
அறிவறி யாமையை யாரும் அறியார்
அறிவறி யாமை கடந்தறி வானால்
அறிவறி யாமை யழகிய வாறே. 3.

2638
குறியாக் குறியினிற் கூடாத கூட்டத்
தறியா அறிவில் அவிழ்ந்தேக
சித்தமாய்
நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றுஞ்
செறியாச் செறிவே சிவமென லாமே.
4.

2639
காலினில் ஊருங் கரும்பினில்
கட்டியும்
பாலினுள் நெய்யும் பழத்துள்
இரதமும்

பூவினுள் நாற்றமும் போலுளன்
எம்மிறை
காவலன் எங்குங் கலந்துநின் றானே.
5.

2640
விருப்பொடு கூடி விகிர்த்னை நாடிப்
பொருப்பகஞ் சேர்தரு பொற்கொடி
போல
இருப்பர் மனத்திடை எங்கள்
பிரானார்
நெருப்புரு வாகி நிகழ்ந்துநின் றாரே.
6.

2641
நந்தி பெருமான் நடுவுள்
வியோமத்து
வந்தென் அகம்படி கோயில்கொண்

டான்கொள்ள
எந்தைவந் தானென் றெழுந்தேன்
எழுதலுஞ்
சிந்தையி லுள்ளே சிவனிருந் தானே.
7.

2642
தன்மைவல் லோனைத் தவத்துள்
நலத்தினை
நன்மைவல் லோனை நடுவுறை
நந்தியைப்
புன்மைபொய் யாதே புனிதனை
நாடுமின்
பன்மையில் உம்மைப் பரிசுசெய்
வானே. 8.

2643
தொடர்ந்துநின் றானென்னைச்

சோதிக்கும் போது
தொடர்ந்துநின் றானல்ல நாதனும் அங்கே
படர்ந்துநின் றாதிப் பராபரன் எந்தை
கடந்துநின் றவ்வழி காட்டுகின் றானே. 9.

2644
அவ்வழி காட்டும் அமரர்க் கரும்பொருள்
இவ்வழி தந்தை தாய் கேளியான் ஒக்குஞ்
செவ்வழி சேர்சிவ லோகத் திருந்திடும்
இவ்வழி நந்தி இயல்பது தானே. 10.

2645
எறிவது ஞானத் துறைவாள் உருவி

அறிவது னோடேயவ் வாண்டகை
யானைச்
செறிவது தேவர்க்குத் தேவர்
பிரானைப்
பறிவது பல்கணப் பற்றுவி டாரே. 11.

2646
ஆதிப் பிரான்தந்த
வாள்ங்கைக்கொண்டபின்
வேதித்து என்னை விலக்கவல்
லாரில்லை
சோதிப்பன் அங்கே சுவடு
படாவண்ணம்
ஆதிக்கட் டெய்வ மவனிவ னாமே.
12.

2647
அந்தக் கருவை யருவை

வினைசெய்தற்
பந்தம் பணியச்சம் பல்பிறப்
பும்வாட்டிச்
சிந்தை திருத்தலுஞ் சேர்ந்தாரச்
சோதனை
சந்திக்கத் தற்பர மாகுஞ் சதுரர்க்கே.
13.

2648
உரையற்ற தொன்றை யுரைத்தான்
எனக்குக்
கரையற் றெழுந்த கலைவேட்
டறுத்துத்
திரையொத்த என்னுடல் நீங்கா
திருத்திப்
புரையற்ற என்னுட் புகுந்தற் பரனே.
14.

எட்டாம் தந்திரம் முடிவு பெற்றது